★ வழக்குகளை நம்புகிறார்; ★

12 பக்கங்கள்   விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 28—5—1978 | இதழ் 37

உடன்பிறப்பே,

இருக்கின்ற வழக்குகள் போதாதென்று இதோ ஒரு வழக்கு! அதுவும் இந்திராகாந்தி அம்மையாரைக் கொலை செய்யச் சதி செய்ததாகவும் கொலை செய்ய முயன்றதாகவும் வழக்கு! இன்னும் பல வழக்குகள் ஜோடிக்கப்பட இருக்கின்றன. எம். ஜி. ஆரிடம் ஆட்சிப் பொறுப்பு வந்து ஓராண்டு காலமாகிறதே; என்ன சாதித்தார் என்றால் "இதோ பாரீர்! தி. மு. கழகத்தினர்மீது அடுக்கடுக்கான வழக்குகள்; இந்தச் சாதனை போதாதா?" என்று எம்.ஜி.ஆர். முழங்குவது காதில் விழுகிறதா?

ஆட்சிப்பொறுப்பேற்ற ஓரிரு மாதங்களில் நமது சட்டப் பேரவையின் முன்னாள் அவைத்தலைவர் புலவர் கைது செய்யப்பட்டார். அவர்மீது வழக்கு தொடரப்பட்டது.

குடிநீர் வாரிய முன்னாள் தலைவர் நண்பர் கந்தப்பனை அவசர அவசரமாக மதுரையிலே போய்க் கைது செய்து சென்னைக்கு அழைத்து வந்தார்கள். வழக்கும் தொடருகிறோம் என்றார்கள்.

இந்திராகாந்திக்குக் கறுப்புக் கொடி காட்டியதற்காக எங்கள்மீது வழக்கு—நாற்பது நாள் சிறையில் வைத்தார்கள்-பிறகு சம்மன் வரும்போது வந்தால் போதுமென்று நிபந்தனையின்றி விடுதலை செய்தார்கள். எங்களை விடுதலை செய்ய வேண்டுமென்று ஆங்காங்கு அறப்போர் மறியலில் ஈடுபட்ட உன் போன்ற உடன்பிறப்புக்கள் ஆயிரக்கணக்கானோரைக் கைதுசெய்து வழக்கும் போட்டு, அந்த வழக்குகள் இன்னும் முடியாத நிலையில் – பல வழக்குகளில் மறியல் போர் வீரர்கள் சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டுமிருக்கின்றனர்.

இப்படியெல்லாம் கைதுகள், வழக்குகள், தண்டனைகள் போன்ற மிரட்டல்களாலேயே தி. மு. கழகத்தை ஒடுக்கிவிடலாமென்று நண்பர் எம்.ஜி.ஆர். திட்டம் தீட்டுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

அவர், படங்களில் கதாநாயகனாக நடித்தவர் — இனியும் அவ்வாறே நடிக்க விரும்புகிறவர் – கதையில் வில்லனாக வருகிறவன், கதாநாயகனை வீழ்த்த எவ்வாறெல்லாம் சதிவலைகள் பின்னுவான் என்பதும், அவற்றில் எல்லாம் கதாநாயகன் சிக்கிக்கொள்ள நேரிட்டாலுங்கூட, இறுதியான வெற்றி கதாநாயகனுக்கும் – வீழ்ச்சி வில்லனுக்கும்தான் கிடைக்கும் என்பதையும் அறியாதவரல்ல அவர்!

ஆனால், ஆட்சிப் பொறுப்பில் இன்று அவர் ஏற்றுள்ள பாத்திரம் வில்லன் பாத்திரமாக வடிவெடுத்துள்ளது. அதனால்தான் பொழுதெல்லாம் அவர் நினைவு, என்னையும் கழகத்தையும் சுற்றிச் சுழலுகிறது! "சட்டம், தன் கடமையைச் செய்யும்" இது அவர் நிருபர்கள் கூட்டத்தில் தவறாது ஒலித்திடும் தாரக மந்திரம்!



கலைஞர் கடிதம்

ஓராண்டுக்கால ஆட்சியில் தமிழ்நாட்டில் தன் கடமையைச் சட்டம் எவ்வாறெல்லாம் செய்திருக்கிறது தெரியுமா?

போலீஸ் லாக்-அப்பில் இருந்த தன் புத்திரனை மீட்க, உள்ளே அத்துமீறி நுழைந்து அதிகாரிகளை வசைமாரி பொழிந்து, லாக்-அப்பில் இருந்தவர்களை பலாத்காரமாக மீட்டுக்கொண்டு போனார் ஆளும் கட்சி எம்.எல்.ஏ. ஒருவர்! அவரை நெருங்க முடியாமல் சட்டம் ஆறுமாத காலமாகத் தவியாய்த் தவித்துக் கொண்டிருக்கிறது.

கள்ளச் சாராயம் காய்ச்சியவர்களைப் பிடிக்கப்போன போலீஸ் அதிகாரி, சென்னையில் கட்டிப் போடப்பட்டுக் கத்தியால் குத்தப்பட்டார்! சாராயம் காய்ச்சியோர் சர்க்கார் கட்சியினர் என்பதால், சட்டம் தன் கடமைக் கரத்தை நீட்ட முடியாமல் முடக்கிக் கொண்டு கிடக்கிறது.

பிரேமா கொலை வழக்கில் துப்புத் துலக்காமல் விடப்போவதில்லையென்று தொடைதட்டல்கள் என்ன - தோள் குலுக்கல்கள் என்ன — மாதங்கள் பல உருண்டோடிவிட்டன; சட்டம், தன் கடமையைச் செய்ய அந்தப் பக்கம் திரும்பவே மறுத்துவிட்டது.

செஷன்ஸ் கோர்ட் தீர்ப்பை எதிர்த்து ஐகோர்ட்டில் அப்பீல் செய்தனர் கொலைக்குற்றம் சாட்டப்பட்டுத் தண்டனை பெற்ற ஆளுங்கட்சியினர்! ஐகோர்ட், அவர்களது தண்டனையை உறுதிப்படுத்தியது — ஆனால், அவர்கள் இன்னும் போலீசார் கையில் சிக்கவில்லை! கேட்டால் போலீசார் தேடுகிறார்கள் என்று பதில் வந்தது! அப்படி பதில் வந்த போதே அந்தக் குற்றவாளிகள் மூவரும், அமைச்சர் கலந்து கொண்ட ஒரு திருமண விழாவில் திருவொற்றியூரில் கலந்து கொண்டனர்! சட்டம், அந்தக் கல்யாணத்தில் சந்தனம் பூசிக்கொண்டுநின்றது — குற்றவாளிகள் பக்கம் முகத்தைக்கூடத் திருப்பவில்லை'

கோரிக்கைகளை எழுப்பிக் கிளர்ச்சி செய்த, பஸ் தொழிலாளர் ஆசிரியர் அரசு ஊழியர்—விவசாயிகள் – அனைவர் மீதும் ஆளும் கட்சியின் தொண்டர்கள் வெறியாட்டம் நடத்தினர். இதனை அனைத்துக் கட்சிகளும் கண்டித்து அறிக்கை விட்டன. எம்.ஜி.ஆரின் சட்டம், மௌனப் புன்னகை புரிந்து கொண்டிருந்ததே தவிர, எழுந்து வந்து

(12ம் பக்கம் பார்க்க)

★ வழுக்கிவிழப் போகிறார்! ★

வடகலையா ? தென்கலையா ?

நீங்கள் வடகலையா? தென்கலையா?

தென்கலைக்கே உரியது காஞ்சி வரதராசப் பெருமாளின் யானை என்பதாக, சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்புக் கொடுத்து விட்டது.

வந்தது கோபம் வடகலைக்கு! நான் வடக்கேயே போகிறேன் என்று சொல்லி உச்சநீதிமன்றத்துக்கு மேல் முறையீடு செய்யப் புறப்பட்டு விட்டது. உயர்நீதிமன்றமும் அனுமதி கொடுத்து விட்டதால் இனி உச்சநீதி மன்றத்தில் ஒரு நூருண்டுக்காவது "நாமம்" ஒரு பெரும் பிரச்னையாக இருக்கப் போகிறது!

நூருண்டா? ஆமாம், குறைந்தது அத்தனை ஆண்டுகளாவது தேவை! ஏன் தெரியுமா? கி. பி. 1792—ல் தொடங்கியதாம் இந்தத் தகராறு! இப்போதுதான் மேல் முறையீடு போகிறது! வடக்கே என்ன தீர்ப்பைப் பெற்று எப்போது திரும்புமோ?

தென்கலை நாமத்திற்கு அடியிலே ஒரு 'காம்பு' இருக்கும்; வடகலை நாமம் மொட்டையாக அடியிலே 'மொழு மொழு' என்றிருக்கும்! ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இதேபோன்று ஏற்பட்ட வழக்கின்போது ஆங்கிலேயர்களுக்குப் புரிய வைப்பதற்காக வடகலை நாமத்தை 'U' மார்க் என்றும் தென்கலை நாமத்தை 'Y' மார்க் என்றும் குறிப்பிட்டார்கள்.

பெருமாளின் யானைக்குக் 'காம்பு'டன் கூடிய நாமத்தைப் போடுவதா அல்லது 'மொட்டை'யாக உள்ள நாமத்தைச் சாத்துவதா என்பதுதான் இப்போதுள்ள பிரச்னை! மன்னிக்கவும், கடந்த 186 ஆண்டுகளாக இருந்துவரும் பிரச்னை! மேலும் தற்போது உச்சநீதி மன்றம் செல்ல இருக்கிறது மேல்முறையீடு.

இதில் பெருமாளின் 'திருவுள்ளம்' என்ன என்று தெரியவில்லை; திருநாமத்தைப் போட்டுக் கொள்ள வேண்டிய அந்த 'ஜீவனின் (யானையின்)' பிரியம் என்ன என்றும் புரியவில்லை!

ஆண்டவனிடத்திலும் யானை இடத்திலும் எவரும் இன்னும் இதுபற்றிக் கேட்கவில்லைபோல் தெரிகிறது! நீதிமன்றமேனும் இதுபற்றி விசாரித்ததோ என்னவோ! வழக்கின் விவரங்கள் எனக்குத் தெரியாது! அத்தோடு இப்போது மேல்முறையீடும் இருப்பதால் வழக்கின் உள்ளே போவது நீதிமன்றத்தை அவமதித்த அபச்சாரத்திற்கு நம்மை ஆளாக்கி விடக்கூடும்!

'அபசாரம்' என்றதும் தான் நினைவுக்கு வருகிறது; எல்லோரையும் படைத்துக் காத்து அருள்பாலிக்கும் 'எம்பெருமான்' இப்படி ஒரு அவமானத்தைத் தமது பக்தர்களே தமக்கு உண்டாக்கு

மீனாக்கந்தன்

வதை எப்படித்தான் பொறுத்துக் கொண்டிருக்கிறாரோ? சர்வ வல்லமை படைத்த 'அவனு'க்குத் தொடர்பான பிரச்சினையில் அவனது 'சித்தம்' என்ன என்று தெரிந்து கொண்டு நடவாமல், அவனது படைப்பில் ஒன்றான மனிதனிடமா நீதி கேட்பது?

'அவனை' நம்பாத நாத்திகர்கள் செய்கிற காரியமல்லவா இது? "கஞ்சி வரதப்பா, காசிக்கு அப்பாலும் உன் வழக்குப் போகுதப்பா! என மெய்யான பக்தர்கள் கதறிப் புலம்பாரோ? இதைவிட அபச்சாரம் தெய்வத்திற்கு வேறு என்ன இருக்கக்கூடும்?

காலம் கலிகாலம்; எனவே என்னென்னவோ நடக்கத்தான் செய்யும்! நாம் வருந்தப்பட்டு, என்ன பயன்? இருந்தாலும் ஒரு யோசனை .....

காஞ்சி வரதப்பன் என்ன கருதினாலும் பரவாயில்லை; காஞ்சி காமாட்சி கண் கலங்கினாலும் கவலை இல்லை; இதைத் தமிழருடைய மானப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டு, இலவசமாக ஒரு யோசனையை வடகலை, தென்கலை இரண்டுக்கும் வாரி வழங்க எண்ணுகிறோம்!

யானைதான் ஒரு பெரிய மிருகம் ஆயிற்றே. அதன்மீது ஒரு நாமம் மட்டுமா போட முடியும்? ஓராயிரம் நாமத்தை அள்ளி இறைக்கலாமே! துதிக்கையிலிருந்து வால் வரை இரண்டு பெரும் பரப்பளவு எல்லா யானைகளுக்கும் உண்டு; வடகலையார் ஒன்றையும், தென் கலையார் இன்னொன்றையும் தமக்கு சுவாதீனமாக்கிக் கொண்டு, விருப்பம்போல் இரு சாராரும் நாமங்களை வாரிப் பூசலாம்?

ஆனால் இதிலும் ஒரு சிக்கல் தோன்றக்கூடும்! யாருக்கு எந்தப் பக்கம் என்பதை எப்படித் தீர்மானிப்பது? வலப் பக்கம் தனக்குரியது என்று வடகலை வாதாடினால் தென்கலை சும்மா இருக்க முடியுமா? வலப் பக்கம் மங்களகரமான 'திசை' ஆயிற்றே!

இப்படியொரு சிக்கல் முன் காலத்திலும் எழுந்ததுண்டு; அது எப்படித் தீர்க்கப்பட்டது என்பது ஒரு சுவையான செய்தி,

மொழிகளில் எது உயர்ந்தது? ஆரியமா? தமிழா?— என்ற ஒரு பெரிய வாக்குவாதம் பழங்காலப் பண்டிதரிடையே நடந்ததாம். 'ஆரியமே, உயர்ந்தது; ஏனெனில் அது தெய்வபாடை' என்றனர் சிலர்; இல்லையில்லை தமிழ்தான் தெய்வமொழி என எதிர் வழக்கிட்டனர் சிலர்! "தமிழ் சிவனார் அருளியது, சிவனே தென்னாடுடையவன்' தென்னாடுடைய சிவனே போற்றி —என்பது இவர்கள் வாதம்!

இவர்களுக்கிடையே சில சமாதானப் பிரியர்கள் தலையிட்டு இரண்டுமே தெய்வ மொழிகள்தாம் என்றனர்; சிவனாரின் கையிலே உள்ள உடுக்கைக்கு இரண்டு பக்கங்கள் உள்ளன அல்லவா? அதிலிருந்துதான் நாதமாத்திரை ஆகிய மொழி பிறந்தது. ஒரு பக்கம் தமிழும் இன்னொரு பக்கம் ஆரியமும் தோன்றியது என்ற ஒரு அற்புதமான விளக்கத்தைக் கூறினர். உடனே எந்தப் பக்கம் எது தோன்றியது என்ற கேள்வி பிறந்தது; மீண்டும் தகராறு முளைத்தது!

உடுக்கையின் வலப்பக்கம் எது எனக் கண்டறியும் முயற்சியில் யாவரும் தீவிரமாக ஈடுபட்டார்கள்! கிழக்குமுகம்தான் மங்களகரமான திசை; எனவே சிவனார் கிழக்கே பார்த்தவாறு நின்று உடுக்கையைக் கையிலேந்தினால், உடுக்கையின் வலப்புறம் தெற்கும் இடப்புறம் வடக்கும் பார்த்தவாறு இருக்கும்; அப்படியானால் தென்திசைத் தமிழ்தான் வலப்பக்கமாகத் தோன்றியிருக்கவேண்டும்! வடதிசை ஆரியம் உடுக்கையின் இடப்பக்கம் இருப்பதால் தமிழ் ஆரியத்தைவிட உயர்ந்தது என்பதில் அட்டியில்லை! —இவ்வாறு தீர்க்கப்பட்டதாம் அன்றைய வழக்கு!

'தமிழ்' அணியினரே வென்றனர்!

இந்தப் பழங்காலத் தீர்ப்பை ஒரு முன் மாதிரியாக ஏற்றுக் கொள்வதானால் இன்றைய நாமச் சிக்கலை' எளிதாகத் தீர்த்து விடலாம். யானையைக் கிழக்கே பார்த்தவாறு நிறுத்தினால் அதன் வலப்பக்கம் தென்திசையை நோக்கி இருக்கும். எனவே அந்தப்பக்கத்தை தென்கலையாருக்கு விட்டு விடலாம்! வடக்கே நோக்கி இருக்கும் இடப்பக்கத்தை வடகலையாருக்கு ஒதுக்கிக் கொடுத்துவிடலாம்!

ஆனால் வடகலையார் இதற்கு ஒத்துக்கொள்ள வேண்டுமே? சிவனாருக்குப் பொருந்தும் நெறிமுறைகள் வைணவாதிகளுக்குப் பொருந்தாது என்று அவர்கள் சொல்லக் கூடும்!

அப்படியானால் இதற்கு என்னதான் முடிவு? ஆழ்வாராதிகளுக்கே வெளிச்சம்! இறைவா, இனி நீ நாமதாரிகளை நம்புவதைவிட எங்களைப் போன்ற நாத்திகரை நம்புவதே நல்லது!

நாங்கள் உன்னை மதிக்கின்றோமோ இல்லையோ ஆனால் நிச்சயம அவமதிக்க மாட்டோம்! நாமத்தை உன் யானைக்கு எப்படிப் போடுவது என்று உச்சநீதி மன்றம் வரையில் சென்று, உலகோர் கண்களில் உன்னை ஒரு கேலிப்பொருளாக ஆக்கமாட்டோம்!

நாத்திகன் மூடநம்பிக்கையை மட்டுமே சாடுகிறான். நம்பிக்கைவாதிகளோ நடைமுறையில் மூலாதாரக் கடவுள் கோட்பாட்டையே இழிவுபடுத்துகிறான்!

[வடகலை நாமம் ('U' மார்க்) போடப்பட்ட கோயில் யானை]

'நெருக்கடி நிலை'க்கான காரணங்கள் - கற்பனையானவை!

இரவோடிரவாக 'நெருக்கடி நிலையை' அறிவித்ததற்குப் பல காரணங்களைக் கூறினர் இந்திராகாந்தி. அவவைகளில் சில:—

1. உள்நாட்டுக் கலவரங்களால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அபாயம் ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது.
2. சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது.
3. பொருளாதார முனையில் அபாயம் ஏற்பட்டுள்ளது
4. எதிர்க்கட்சித் தலைவர்கள் வன்முறைகள் மூலம் ஆட்சியைக் கவிழ்க்கத் திட்டமிட்டுள்ளார்கள்.

தம் செய்கையை நியாயப்படுத்துவதற்காக இந்திரா கூறிய காரணங்கள் அனைத்தும் 'கற்பனையானவைகளே' எனக் கூறுகிறது ஷா கமிஷன் அறிக்கை :—

1. சட்டம், ஒழுங்கைப் பொறுத்தவரை பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை ஆளுநர்கள் அனுப்பும் அறிக்கையில் சட்டம், ஒழுங்கு நாடு முழுவதிலும் சீராகக்கட்டுக்குள் அடங்கியிருப்பதாகத் தெளிவாக்கப்பட்டிருக்கிறது
2. பொருளாதார முனையில் அபாயம் ஏதுமிருக்கவில்லை.
3. 'நெருக்கடி நிலை' பிரகடனம் செய்யப்படுவதற்கு முன்னர் சட்டம், ஒழுங்கு நிலை சீர்குலைந்துவிட்டதாக மத்திய உள்துறை அமைச்சரவைக்கு எந்தவிதமான அறிக்கையும் வரவேயில்லை.
4. 1975 ஜுன் 25ஆம் தேதிக்கு முன்னர் உள் விவகாரத்துறை நெருக்கடிநிலைப் பிரகடனம் தொடர்பாக எவ்வித அவசரத் திட்டங்களையும் தயாரிக்கவில்லை.
5. உள்நாட்டு நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்யவேண்டிய தேவை இருந்ததாகப் புலனாய்வுத் துறையினர் எவ்விதமான அறிக்கையும் தரவில்லை.
6. உள்நாட்டு நிலவரம் குறித்துக் கவலை தெரிவிக்கும் அறிக்கை எதையும் உள்விவகாரத் துறை தலைமை அமைச்சருக்கு அனுப்பவில்லை.

தயாராகட்டும் தங்கக் 'காக்காய்!'

காரைக்கால் பகுதியில் உள்ள திருநள்ளாறு சனீசுவரன் கோவிலுக்குத் தங்கக் 'காக்காய் வாகனம்' செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

இதற்காகக் காரைக்கால் அரசு நிர்வாகியைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவை புதுவை அரசு அமைத்திருக்கிறது. இக்குழு, தனது அறிக்கையை ஜூலை 12ஆம் தேதி வாக்கில் அரசிடம் தாக்கல் செய்யுமாம்.

வேண்டியதுதானே! சிக்கல் சிங்கார வேலருக்குத் தங்க மயில் வாகனம்! திருச்செந்தூர் முருகனுக்குத் தங்க ஆட்டுக்கடா வாகனம்! திருப்பதி வெங்கடாசலபதிக்குத் தங்கக் கருட வாகனம்! திருத்தணி முருகனுக்கு வெள்ளித் தேர்! சிவன் கோயில் தோறும் வெள்ளி ரிஷப வாகனங்கள்! இப்படி எல்லா சாமிகளும், வெள்ளி, தங்க வாகனங்களில் ஏறி வீதி உலா வரும்போது. திருநள்ளாற்றுச் சனீசுவர பகவான்மட்டும் வெறும் மரக் கட்டைக் காக்கை வாகனத்தில்தானா காலகாலத்துக்கும் சவாரி செய்ய வேண்டும்?

தாராளமாக நடக்கட்டும் தங்கக் காக்கை வாகனத் திருப்பணி!

புதுவை அரசு இத்தனை ஆண்டுக் காலம் இதில் கவனம் செலுத்தாமல் இருந்ததே வருந்தத்தக்கது மட்டுமல்ல; கண்டிக்கத் தக்கதுமாகும்!

சனீசுவர பகவானின் அருமை தெரியாத பிரஞ்சுக்காரர்கள் ஆண்டபோதுதான் அலட்சியமாக இருந்துவிட்டார்கள் என்றால், அடுத்து வந்த காங்கிரசு ஆட்சியும், தி.மு.க. ஆட்சியும் அப்படியே அலட்சியப்படுத்திவிட்டன. நல்லவேளையாக இப்போது வந்திருக்கிற நடிகர் கட்சி அரசாவது இதில் 'பக்திச் சிரத்தை'யோடு நடவடிக்கை மேற்கொண்டிருப்பது சனீசுவர பக்தர்களால் பாராட்டி வரவேற்கப்படும் என்பதில் ஐயமில்லை!

ஏனெனில், அ.தி.மு.க. மூலவரே ஜாதகத்தில் நம்பிக்கையுள்ளவர். அது மட்டுமல்லாது, திருநள்ளாற்றுகோவிலில் தமது பெயரில் அர்ச்சனைக்கு ஏற்பாடு செய்து பிரசாதம் பெற்றதாகவும் கேள்வி!

மூலவர் எப்படியோ அப்படி புதுவை முதல்வரும்!

முன்பிருந்த ஆட்சிகளெல்லாம் சனீசுவர பகவானின் அருளைப் பெறுததால் தான் 'அற்பாயுளில்' முடிந்தன. இப்பொழுதுள்ள அ. தி. மு. க. ஆட்சிக்கும் 'அஷ்டமத்தில் சனி' இருந்து ஆட்டிப் படைத்து அலைக்கழித்து வருவதாக ஜோதிடர்களெல்லாம் கூறுகிறார்களாம். அதனால்தான் தங்கக் காக்காய் வாகனத் திருப்பணி செய்தாவது சனீசுவர பகவானைக் காக்காய் பிடித்து 'தீர்க்காயுசு' பெற்றுவிடலாம் என்ற முடிவுக்கு புதுவை அ.தி.மு.க. அரசு வந்துள்ளது போலும்!

தங்கக் காக்கை வாகனம் செய்யமுன் வந்த இந்தநேரம் மிகப் பொருத்தமான நேரமாகும். நாட்டிலே தங்கம் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற ஐயப்பாடு வேண்டாம்? தாராளமாக அசல் சொக்கத் தங்கமே கிடைக்க வாய்ப்புள்ளது. பணத்துக்கும் பஞ்சமிருக்காது; பணம் கொடுக்கத்தான் பக்தகோடிகள் இருக்கிறார்கள்; பற்றாக்குறைக்கு அ.தி.மு.க. மூலவரே வாரி வழங்கி தனது வள்ளல் தன்மையை சனீசுவரனிடமும் காட்டத் தவறமாட்டார் என்று நம்புவோமாக!

தங்கக் கட்டுப்பாடு கொண்டு வந்த மொரார்ஜி தேசாய் இப்பொழுது பிரதமராக இருக்கிறாரே என்று அஞ்சத் தேவையில்லை. தங்கக் கட்டுப்பாட்டு உத்தரவினால் எந்தக் கோயில் காரியங்களும் இதுவரை பாதிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை!

மேலும், அன்று தங்கக் கட்டுப்பாடு கொண்டு வந்த மொரார்ஜியே இன்று அரசிடமுள்ள தங்கத்தையெல்லாம் (சுமார் 500 கோடி மதிப்புள்ளது) விற்பனை செய்ய ஏற்பாடு செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

திருப்பதி தேவஸ்தானமும் தன்னிடம் தேங்கியுள்ள தங்கத்தை விற்றுவிட மத்திய அரசிடம் அனுமதி கேட்டுள்ளது. மொரார்ஜி தேசாய் அதற்கும் தாராளமாக அனுமதி வழங்கலாம்!

நல்ல நேரத்தில்தான் நள்ளாற்றுக் கோவிலில் இந்த வாகனத் திருப்பணி தொடங்கியிருக்கிறார்கள். இந்த வாய்ப்பை நழுவ விட்டுவிட வேண்டாம்.

திருநள்ளாற்றுச் சனீசுவரன் மட்டுமல்ல; மிச்ச மீதியுள்ள கோவில்களிலெல்லாம்கூட இப்போதுள்ள மர வாகனங்களையும், மரத் தேர்களையும் வெள்ளியாகவும், தங்கமாகவும் மாற்றிக்கொள்வது நல்லது!

தங்கக் காக்கை வாகனத் திருப்பணிக் குழுவுக்குக் காரைக்கால் அரசு நிர்வாகியே தலைமை ஏற்றிருப்பதும் சிறப்புக்குரியது ஆகும். அந்தக் குழு தனது அறிக்கையை விரைவில் தயாரித்துக் கொடுக்க வேண்டும்.

அடுத்த சனிப் பெயர்ச்சிக்குள் சனீசுவர பகவான் தங்கக்காக்கை வாகனத்தில் பவனி வரவேண்டும். அந்தத் தங்கக் காக்கை வாகனத் திருவுலாவை, 'காஞ்சிப் பெரியவர்' ஆசியுடன் அ. தி. மு. க. மூலவரைக்கொண்டே தொடங்கி வைக்க, புதுவை முதல்வர் ஆவனசெய்ய வேண்டும்.

இத்தியாதி காரியங்களால் புதுவை அமைச்சரவையைப் பீடித்துள்ள 'தோஷம்' நீங்கி, சனி பகவானின் அருள் கிட்டக்கூடுமல்லவா?

கேவலம், கள்ளச்சாராயக்காரர்களும், கள்ளக்கடத்தல்காரர்களும்கூட இலட்சக்கணக்கான ரூபாய் விலைமதிப்புள்ள 'படகுக்கார்'களில் பவனிவரும்போது, இந்த உலகையே ஆட்டிப் படைக்கும் சக்தி வாய்ந்த சனீசுவர பகவான் சில லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கக் காக்காய் வாகனத்தில் ஏறிச் சவாரி செய்வது கூடாதா?

போயும் போயும் காக்காய் வாகனத்துக்காகவா தங்கத்தைச் செலவிடுவது என்று கேட்காதீர்கள். பெருச்சாளி வாகனமே வெள்ளியிலும், தங்கத்திலும் இருக்கும்போது காக்காய் வாகனம் தங்கத்தில் இருக்கக்கூடாதா?

'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பதுபோல, திருநள்ளாற்றுச் சனீசுவரனுக்குத் தன் வாகனம் (காக்கை) பொன் வாகனம்தானே!

பதவி பறிபோய்விடுமோ என்ற அதிர்ச்சியால் உடல் நலம் குன்றி 'ஜிப்மர்' மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, அண்மையில் வீடு திரும்பியுள்ள புதுவை முதல்வர், திருநள்ளாறு சென்று தரிசனம் செய்து சனீ பகவானின் அருளைப் பெறுவாராக!

- மா. செ.

'கலைமகள்' அருள் இன்றியே முன்னேறும் சமூகம்!

உயர் குலத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கே 'கலைமகளின் கடாட்சம்' கிட்டும் என்னும் 'மனுதரும சாத்திர'த்தின் கூற்று பொய்யாக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. (பதினோராம் வகுப்பு) தேர்வில் தமிழகத்திலேயே முதலாவதாகத் தேறிய பெண் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர். இரண்டாவதாகத் தேறியவரும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்தான்.

அதிக மதிப்பெண் பெற்றவர்கள் வரிசையில் (30வது வரிசைவரை(உள்ள இருநூறு பேர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இருபதாவது, இருபத்து மூன்றாவது இடத்தைப் பெற்றிருப்பவர்கள் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஆவர்.

மேலும், இவ்வாண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் இதற்குமுன் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்குக் கூடுதலான பெண்கள் கலந்துகொண்டதும் குறிப்பிடத்தக்கது.

முதலாவதாகத் தேர்வுபெற்ற செல்வி சந்திரலேகா, நாத்திகரான பி. ஆர், சுப்பையன் என்பவரின் மகளாவார்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் வழிவந்த திராவிட இயக்கத்தினர் கடந்த அரை நூற்றாண்டாக ஆற்றிய பணியின் பயனாகவே, பிற்பட்ட சமூகம் இந்த முன்னேற்றம் கண்டுள்ளதுஎன்பதைமறுக்கமுடியுமா?

தென்னாற்காடு மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகள் பட்டியல்

நடைபெற இருக்கும் மாவட்டக் கழகத் தேர்தலுக்கான — தெ. ஆ. மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகள் பட்டியல்—முகவரிகள் விவரம் வருமாறு :—

காணை ஒன்றியம்

செயலாளர் ;

கி. கே. எஸ். முருகதாசன்,
அகரம் சித்தாமூர்,
வெங்கந்தூர் போஸ்ட்,
விழுப்புரம் வட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

டி. அண்ணாமலை,
கல்பட்டி போஸ்ட்,
விழுப்புரம் வட்டம்.

ஏ. கிருட்டிணமூர்த்தி, பி.காம்., [பி.எல்.
கடயம்
நல்லாப்பாளையம் போஸ்ட்,
(வழி) கண்டாச்சிபுரம் (S.O.)
தென்னாற்காடு மாவட்டம்.

கே. கே. தண்டபாணி,
பனமலை போஸ்ட், (வழி)
அனந்தபுரம். (எஸ்.ஓ.)
தெ.ஆ. மாவட்டம்.

சின்னசேலம் ஒன்றியம்

செயலாளர் ;

து. பெரியசாமி.
நமசிவாயபுரம்,
தொட்டியம் அஞ்சல்,
சின்னசேலம்.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

ஏ. ஆர். வேலாயுதம்,
20, புதுத் தெரு,
சின்னசேலம்—606 201,
தெ.ஆ. மாவட்டம்.

ஆர். பழனியா பிள்ளை,
அனுமந்தல்,
நைனார்பாளையம்,
பின்கோட்—606 301.

வெ. இராமன்,
கடத்தூர்;
தெங்கியநத்தம் அஞ்சல்,
சின்னசேலம்—606 201.

புவனகிரி ஒன்றியம்

செயலாளர் :

ஆ. கோவிந்தராசன்,
மேலமூங்கிலடி,
வயலூர் அஞ்சல்.
சிதம்பரம் தாலுக்கா.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

ஆர். சிவநேசன்,
185, புதுத் தெரு,
சேத்தியாத்தோப்பு அஞ்சல்,
பின்கோட்—608 702.

துரை. அன்பரசன்,
பாளையக்காரத் தெரு.
புவனகிரி அஞ்சல்—608 601.

டி. எஸ். குகன்,
மேல்வளையமாதேவி,
சிதம்பரம் தாலுக்கா,
பின்கோட்—608 704.

கம்மாபுரம் ஒன்றியம்

செயலாளர் ;

திரு. இராசவேலு,
ஆ. தெங்கங்குப்பம்,
அம்மேரி அஞ்சல்,
விருத்தாசலம் வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

கே. சிவலோகநாதன்,
வேப்பங்குறிச்சி,
நெய்வேலி அஞ்சல்,
விருத்தாசலம் வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்.

ஏ. சிவக்கொழுந்து,
சிறுவரப்பூர்,
பெரியகோட்டிமலை அஞ்சல்,
விருத்தாசலம் வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்.

வீ. தம்புசாமி,
வடக்கு சேப்பளாநத்தம் P.O
விருத்தாசலம் வட்டம்
தெ.ஆ. மாவட்டம்.

முகையூர் ஒன்றியம்

செயலாளர் ;

கே. பாண்டுரங்கன்,
மணம்பூண்டி
மணம்பூண்டி அஞ்சல்,
அரகண்டநல்லூர் (வழி)
திருக்கோவிலூர் தாலுக்கா,
தெ.ஆ. மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

மு. பூமாறன்,
மேலக்குண்டூர்,
பரனூர் அஞ்சல்,
முகையூர் வழி,
திருக்கோவிலூர் தாலுக்கா,
தெ ஆ மாவட்டம்.

இரா. கோவிந்தசாமி,
தேவனூர்,
தேவனூர் அஞ்சல்,
அரகண்டநல்லூர் (வழி)
திருக்கோவிலூர் தாலுக்கா
தெ.ஆ மாவட்டம்.

இ. மாணிக்கம்,
மாரியம்மன் கோயில் தெரு,
மணலூர் பேட்டை,
மணலூர்பேட்டை அஞ்சல்,
திருக்கோவிலூர் தாலுக்கா.

வானூர் ஒன்றியம்

செயலாளர் ;

என். சங்கர்,
தென்கோடிபாக்கம்
தென்கோடிபாக்கம் அஞ்சல்
திண்டிவனம் தாலுக்கா,
தெ.ஆ. மாவட்டம்.
பின் கோட்—604 102.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

வி. இராசு,
தொள்ளாமூர்,
எரையூர் அஞ்சல்,
(வழி) மையிலம்,
திண்டிவனம் வட்டம்.

ஆரா. செயராமன்.
ஆண்டிபாளையம்
ஒழிந்தியாம்பட்டு போஸ்ட்,
(வழி) வானூர்,
திண்டிவனம் வட்டம்.

பி. கே. திருக்காமு,
திருச்சிற்றம்பலம் கூட்டு [பாதை,
ஆரோவில் (வழி)
திண்டிவனம் வட்டம்.

நல்லூர் ஒன்றியம்

செயலாளர் :

அர. இலச்சுமணன்,
"அன்பரங்கம்"
திவளூர்—திவளூர் அஞ்சல்,
கருவேப்பிலங்குறிச்சி (வழி)
விருத்தாசலம் வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

ப. கஞ்சமலை,
தொ. குடிகாடு கிராமம்,
கடலூர் அஞ்சல்,
விருத்தாசலம் தாலுக்கா,
தெ ஆ. மாவட்டம்.

எஸ் எம். முத்துசாமி,
70 மெயின் ரோடு,
பெண்ணாடம் அஞ்சல்,
பெண்ணாடம,
தெ.ஆ. மாவட்டம்.

து. ராமதாஸ்,
கொடிகளம் கிராமம்,
திருவட்டத்துறை அஞ்சல்,
விருத்தாசலம் வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்.

மேல்மலையனூர் ஒன்றியம்

செயலாளர் :

இல. பவுணன்
வளத்தி. வளத்தி போஸ்ட்;
செஞ்சி வட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

வி. இராமன்,
கண்ணலம்,
வளத்தி போஸ்ட்,
செஞ்சி வட்டம்,
தெ. ஆ மாவட்டம்.

இ. கணேசன்,
மேல்மலையனூர்.
மேல்மலையனூர் போஸ்ட்,
செஞ்சி வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்,

கே. கண்ணன்,
அண்ணமங்களம் போஸ்ட்,
இல்லோடு எஸ் ஓ.
செஞ்சி வட்டம்.

கள்ளக்குறிச்சி ஒன்றியம்

செயலாளர் :

எஸ். பி, பச்சையப்பன்.
சோமாண்டார்குடி போஸ்ட்
வள்ளக்குறிச்சி வழி,
தெ.ஆ. மாவட்டம்.
பின்கோட்—606 202.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

எஸ். துரைராஜ்,
காடிசித்தூர் போஸ்ட்,
கள்ளக்குறிச்சி வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்.

அ. சீனிவாசன்,
ஆலத்தூர் போஸ்ட்,
கள்ளக்குறிச்சி வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்—606 208.

பி வரதன்,
வீரசோழபுரம் போஸ்ட்,
கள்ளக்குறிச்சி வட்டம்,
தெ,ஆ. மாவட்டம்,
பின்கோட்—606 206.

திருக்கோவிலூர் ஒன்றியம்

செயலாளர் ;

மூனுசாமி. எஸ்.
தேவியகரம் அஞ்சல்,
திருக்கோவிலூர் வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்,
பின்கோட்—605 757.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

ச. சி. அன்பரசன்,
சந்தைப்பேட்டை,
திருக்கோவிலூர் வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்—605 757

கே. வெங்கடாசலம்,
மேல வீதி,
திருக்கோவிலூர் வட்டம்,
தெ ஆ. மாவட்டம்—605 757

செ. வி. கீர்த்தி,
கிழக்குவீதி, திருக்கோவிலூர்
தெ.ஆ. மாவட்டம்—605 757

விக்கிரவாண்டி ஒன்றியம்

செயலாளர் :

ச. அழகுவேலு.
விக்கிரவாண்டி போஸ்ட்,
(வழி) விழுப்புரம்,
ஆர். எம். எஸ்

மாவட்டப் பிரதிநிதிகள் ;

பி. கலிவரதன்,
வாக்கூர் போஸ்ட்,
(வழி) திருக்கனூர்,
விழுப்புரம் வட்டம்.

கோ. செயராமன்,
சிந்தாமணி போஸ்ட், (வழி)
முண்டியம்பாக்கம், எஸ்.ஓ.
விழுப்புரம், ஆர்.எம்.எஸ்.

அ. முத்துக்கிருட்டிணன்,
முட்டத்தூர் போஸ்ட்,
(வழி) அன்னியூர் எஸ் ஓ.
விழுப்புரம் வட்டம்.

கீரப்பாளையம் ஒன்றியம்

செயலாளர் :

கோ. வீரமணி,
கீரப்பாளையம்,
கீரப்பாளையம் அஞ்சல்,
சிதம்பரம் வட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

கோ. பாலசுந்தரம்,
ஊராட்சி மன்றத் தலைவர்,
வடஉரி ராசபுரம்,
கீரப்பாளையம் அஞ்சல்,
சிதம்பரம் வட்டம்.

கி. மு. முகிலன்,
கீரப்பாளையம்,
கீரப்பாளையம் அஞ்சல்,
சிதம்பரம் வட்டம்.

துரை இராமலிங்கம்,
ஊராட்சி மன்றத் தலைவர்,
பேருர், பேருர் அஞ்சல்,
சிதம்பரம் வட்டம்.

அண்ணா கிராமம் ஒன்றியம்

செயலாளர் ;

வி. திருவேங்கடம்,
தட்டாம்பாளையம்,
மேல்குமாரமங்கலம் அஞ்சல்
திருத்துரையூர் (வழி)
பண்ருட்டி தாலுக்கா.

மாவட்டப் பிரதிநிதிகள் ;

த. வெங்கடேசன்,
சின்னபேட்டை,
திருத்துரையூர் போஸ்ட்,
விழுப்புரம், ஆர்.எம்.எஸ்.

பெ. மாணிக்கவேலு,
சாத்திபட்டு,
சாத்திபட்டு போஸ்ட்,
பண்ருட்டி (வழி)

ஆ. கிருஷ்ணமூர்த்தி,
அகரம், எழுமேடு போஸ்ட்,
மேல்பட்டாம்பாக்கம் (வழி)

மைலம் ஒன்றியம்

செயலாளர் ;

ஏ. யாகூப்,

[10-ம் பக்கம் பார்க்க]

ஐ. ஜி. போட்ட பொய்த்திரை விலகுகிறது !

அண்மையில் சென்னை மயிலாப்பூர் முண்டகக்கண்ணி அம்மன் கோவில் அருகே இரண்டு கள்ளச் சாராய 'கோஷ்டி'களுக்கிடையே பெரிய கலவரம் நடந்து அப்பகுதி மக்களனைவரும் வெளியேவர அச்சப்பட்டு வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர்.

கலவரத்தை அடக்க வந்த காவலரும் செய்வதறியாது திகைத்துப் போய் நின்றனர்.

பிறகு, கலவரத்தில் ஈடுபட்ட சிலர் கைது செய்யப்பட்டார்கள் ; அவர்களில் தங்களுக்கு வேண்டியவர்களைப் பொறுப்பில் அழைத்துவர, சென்னை 98வது வட்ட அதிமுக அமைப்பாளரும், மங்கைவெளி எம். ஜி. ஆர். மன்றச் செயலாளரும் மயிலாப்பூர் காவல் நிலையத்திற்குச் சென்றார்கள் ; அங்கிருந்த காவலரைப் பார்த்து அவ்விருவரும் தங்களுக்கு வேண்டியவர்களை விடுவிக்கும்படி ஆணவத்தோடு கட்டளையிட்டிருக்கிறார்கள்.

காவலரோ, தம்மிடம் அந்த அதிகாரம் இல்லையென்றும் மேலதிகாரிதான் அதற்கெல்லாம் வரவேண்டும் என்றும் கூறிவிட்டார்.

'புனித புத்தரின்' சீடர்களுக்கு வந்ததே கோபம்...... காவலரின் சட்டைக் காலரைப் பிடித்துக் குலுக்கி மிரட்டியிருக்கிறார்கள் :

"நாங்கள் யார் தெரியுமா ? வாத்யார் கட்சியைச் சேர்ந்தவங்க" என்று,

இதேபோல்—

சில நாட்களுக்கு முன் கோவை மாவட்டத்தில் காவல் நிலையத்திற்குள் புகுந்து—ஒரு கைதியை விடுவிக்கச் சொல்லி 'சத்யா புத்திரரின்' கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ. ஒருவர் தாக்குதல் நடத்தியதையும் மறப்பதற்கில்லை.

ஆனால், நம்முடைய ஐ. ஜி. ஸ்டிரேஸி சொல்கிறார் ;

"அ. தி. மு. க. கட்சியினர்தான் இதுவரை காவல் நிர்வாகத்தில் குறுக்கிட்டதே இல்லை......" என்று.

பாவம், தாம் போட்ட பொய்த்திரை இவ்வளவு சீக்கிரம் விலகும் என்று அவருக்கே தெரியாது போய்விட்டது.

புருஷன்

தென்னரசு

(2)

"குருவம்மா, சக்குவைப் பத்திரமா பாத்துக்க; மதுரை ஒரு மாதிரிப்பட்ட ஊரு, கக்கத்துக்குள்ளே கர்ணம் பாயிர பயலுங்கல்லாம் இருக்கிற பட்டணம். பத்து நாள்லே வந்து இரண்டு பேரையும் கூட்டிப் போறேன்'' என்று சொல்வதற்குள் சேர்வை இருபது தடவைகள் மேல் மூச்சுவாங்கி விட்டான். குருவம்மா தனிமையில் இருந்து கணவனை நினைத்து கண்ணைக் கசக்கும் போதெல்லாம், 'ஏம்மா சும்மா கண்ணைக் கசக்கிக்கிட்டே இருக்கே! தெய்வம் நின்னு தான் கேட்கும்: சும்மா இரு! அழுதா வந்திருமா! உள்ளூர் சம்பந்தம் வேணும் வேணும்னு தலையிலே அடிச்சுக்கிட்டேனே நீயும் உங்கம்மாவும் கேட்டாத்தானே அத்தை மகன்னே நீ தம்பி மகன்னு அவ, இப்ப என்ன ஆச்சு அவ கண்ணை மூடிட்டா, நீ காத்தா பறக்குறே! உன் புருஷன் நாடோடியாப் போய்ட்டான்' என்று சொல்லிக் கொண்டே தேம்ப ஆரம்பித்து விடுவான். குருவம்மாதான் பிறகு செண்பகஞ் சேர்வைக்கு ஆறுதல் சொல்லுவாள். குருவம்மாவுக்கு கலியாணமான மறு வருஷமே அவள் தாயை இழந்து விட்டாள். அதற்குப் பிறகு செண்பகஞ் சேர்வை மணம் புரிந்துகொள்ளவேயில்லை. அவன் தனது அன்பு பாசம் எல்லாவற்றையும மகள் மீதே வைத்துவிட்டான். குருவம்மாவுக்கு பெண் பிறந்ததும் சக்கு என்று பெயர் வைத்ததும் செண்பகஞ் சேர்வைதான். சக்கு அவனது மனைவியின் பெயர். பாட்டி பெயரை பேத்திக்கு வைத்து, பாட்டன் பெயரை பேரனுக்குச் சூட்டி ஒரு தலைமுறை முந்திய தலைமுறையை மறக்காமல் இருக்கும் தமிழ் நெறியை சேர்வை அப்படியே பின்பற்றினான்.

செண்பகஞ் சேர்வை அணைக்கட்டு வேலைக்குப்போய் விட்டான். அங்கே, அணைக்கட்டுப் பக்கத்தில் ஒரு தமிழ்க் கிராமமே அமைந்திருந்தது. ஒவ்வொரு கொத்தனாரும் குடியும் குடித்தனமுமாக வந்திருந்தார்கள். இரவு நேரங்களில் நீரும் நிலவொளியும் சந்தித்துச் சல்லாபித்துக்கொள்ளும் போதெல்லாம் சேர்வைக்கு இளமை நினைவுகள் பீறிட்டுக் கிளம்பிடுவதுண்டு, ஆனால் அடுத்தகணமே அந்தத் தாகம் தணிந்துவிடும். 'எனக்கே இந்தக் கதின்னு எம்மவ குருவம்மாவுக்குஎப்படி இருக்கும்? முப்பத்தஞ்சு வயசுதானே ஆகுது? நா பெத்த மக ஈயாத்துடிக்குமே! சே எம்மக தெய்வந்தான். சண்டாளப் பய எம்மருமகன் இப்பேர்ப்பட்ட பொண்ணு மேலேயும் பழியைச் சுமத்திட்டு ஓடிப் போய்ட்டானே! அவன் உருப்படுவானா?'— அணைக்கட்டில் ஒவ்வொரு நாள் இரவும் செண்பகம் இப்படி புலம்பத்தான் செய்தான். புலம்பலும் ஒரு தத்துவம் தானே ஆனால் மனதுக்கு வேண்டுமானால் அது ஆறுதலாக இருக்கும். அதனால் பரிகாரம் கிடைக்குமா?

மறுவாரம் செண்பகஞ் சேர்வை மதுரைக்குப் போய் குருவம்மாவையும் சக்குவையும அழைத்துக் கொண்டு அணைக்கட்டுக்கு வந்துவிட்டான். எல்லோருக்கும் போல் செண்பகத்துக்கும் ஒருஓலைக் குடிசை கிடைத்தது. அரசாங்கத்தின் கருணையால் வாடகை இல்லாமல் தொழிலாளர்களுக்குக் கிடைத்த மண் மாளிகை அது கறையான் புற்றுக்களைப்போல் கும்பல் கும்பலாகக் குடிசைகள் அமைந்திருந்தன.

ஃ ஃ ஃ

'கொத்தனார் இருக்காரா?' குடிசைக்கு வெளியில் நின்று யாரோ கூப்பிடும் குரல்கேட்டு குருவம்மா வெளியில் வந்தாள்.

"கொத்தனாரு எங்கே போய்ட்டாரு?'

'சம்புலியுத்தூருக்குப் போயிருக்காரு அப்பா! இப்ப வந்திடுவாரு! நீங்க யாரு?' குருவம்மா கேட்டாள்

"செந்தூர்ப்பாண்டி எம் பேரு!''

"அப்பா வந்ததும் சொல்றேன்'' என்று குருவம்மா சொல்லிக்கொண்டிருக்கும் போதே செண்பகம் வந்துவிட்டான்,

"வாங்க மேஸ்திரி தம்பியா? குருவம்மா, கயத்துக் கட்டிலே தூக்கிப் போடம்மா... செண்பகத்தின் உபசரணை பலமாக இருந்தது,

"இல்லே இல்லே, நா ஒரு முக்கிய சோலியா வந்தேன் நாளைக்கு பத்து சித்தாளு தேவைப்படுது. அதான் நமக்கு வேண்டியவங்களா பாத்து ஏற்பாடு பண்ணிக்கிட்டு வர்றேன், இங்கே யாராச்சும் வரச் சௌரியப்படுமான்னு கேட்கலாம்னு வந்தேன்'' செந்தூர் கேட்டான்.

"இங்கே அப்படி இல்லேயே தம்பி: குருவம்மா வீட்டைப் பார்த்துக்கணும். சின்னஞ் சிறிசு இருக்கிற வீடு...'' இப்படி செண்பகம் சொல்லி முடிப்பதற்குள்செந்தூர் குறுக்கிட்டான்.

"அக்கா வீட்டைப் பூட்டிப்புட்டு வந்துட்டா போகுது!''

"அதுமட்டும்னு வந்திடலாமே; என் பேத்தி இருக்குதே. அதை எப்படித் தம்பி வேலைக்குக் கூட்டி வர்றது; சின்னப்பொண்ணு'' என்றான் செண்பகம் சேர்வை.

செந்தூரின் கண்கள் குடிசைக்குள் மேய்ந்தன இருட்டுக்கும ஒரு ஒளி உண்டல்லவா? அந்த ஒளியில் சக்குவின் கண்கள் மட்டும் கருப்பு மணிகளைபபோல மின்னின.

"நமக்கு சம்பாத்தியம் பெரிசில்லே தம்பி, ஊரையும் பேரையும் காப்பாத்திக்கணும் சம்பாத்தியத்தை எப்பவும் எதிலேயும் சம்பாதிக்கலாம் மரியாதையை லேசில் சம்பாதிக்க முடியுமா? பாழடைஞ்ச மாளிகையிலே கலசமா இருப்பதைவிட உறுதியான சின்னக் கட்டிடத்திற்கு அஸ்திவாரமா இருப்பது உத்தமம்னு பெரிய கொத்தனாரு அடிக்கடி சொல்லுவாரு தம்பி. செண்பகஞ் சேர்வையின் பேச்சில் செந்தூர் பிரமித்துவிட்டான்.

அவன் போன பிறகு குருவம்மா முணுமுணுத்தாள்.

"ஏப்பா, ஒரே வார்த்தையில் சொல்லிப் போகச் சொல்லாமெ கதையெல்லாம் பேசு நீங்களே எதற்காக? அந்த ஆளைப் பார்த்த ஒடனேயே எனக்குப் பிடிக்கல்லே! கண்ணிலே கள்ளியம்பாலே அடிக்க; ஏந்தான் இப்படிப் பொம்பளைங்களைப் பார்க்கிறானோ தெரியல்லே!'' குருவம்மா கிட்டித்தாள்.

'ஸ்... ஸ்.. மெதுவா; அடுத்த வீட்டுக்காரன் காதிலே விழுந்திடப் போவுது நமக்கெதுக்கம்மா பொல்லாப்பு? கேட்டான்; முடியாதுன்னு சொல்லிட்டோம். அவ்வளவுதானே: இந்தா பாரு குருவம்மா யாரைப்பற்றியும் நீ முடிவு கட்டலாம்? உரிமை இருக்கு; ஆனா அதை வெளிக் காட்டிக்க ரைட்டு' இல்லே இது தெரிஞ்சவங்கதான் அடக்கமாக இருக்காங்க.மத்தவங்க கண்டதெப் பேசி வாய் புளித்ததோ, மாங்கா புளித்ததோன்னு மல்லுக்கு நிக்கிறாங்க!'' — செண்பகம் அனுபவத்தை அள்ளித் தெளித்தான்

"சக்கு. உங்க தாத்தா காந்தியாயிட்டாருடி''

அப்பா நம்மெப் போல கலிங்ககிட்டே இருக்கிற எந்தக் குணத்துக்கும் மதிப்பிருக்காதப்பா! சீமான் பொறுமையா இருந்தா மகாத்மான்னு சொல்லுவாங்க. நீங்களும் நானும் பொறுமையா இருந்தா 'வக்கத்ததுங்க'ன்னு சொல்லுவாங்க. நீங்க இன்னும் திருமலே நாயக்கரு காலத்திலேயே இருக்கீங்க!'' குருவம்மாவின் விளாசலைக் கேட்டு சக்கு சிரித்தாள்

இவ்வளவையும் கேட்டுக் கொண்டு செண்பகம் மனதுக்குள்ளே சிரித்தான். அதில் அவனுக்கொரு திருப்தி. மகள் குதூகலமாக இருக்க வேண்டுமென்பதுதானே அவனது வாழ்க்கையின் குறிக்கோளாகி விட்டது

"எம் மகள் எவ்வளவு புத்திசாலித்தனமாகப்பேசுது! ஏழாம் வகுப்புப் படிச்சுட்டே இப்படிப் பேசுதே .. பத்தாங்கிளாஸ்வரை படிச்சிருந்தா வாத்தியாரம்மாவாக்கூட வந்திருக்கும்! எம் புத்தியைச் சோட்டாலடிக்கணும். அவசரப் பட்டு இப்படிக் கெடுத்துப் புட்டேன்' ...... கப்பல் கவிழ்ந்த பிறகு உபகரணங்களைப் பற்றிச் சிந்திக்கும் முன் யோசனையில்லாத மாலுமியைப் போல் செண்பகம் யோசனையில் மிதந்தான்.

"அப்பா!' குருவம்மா எதையோ சொல்லவாயெடுத்தாள்,

"ஸ்...ஸ்..! செந்தூர் வர்றான்; பேசாமெ இரும்மா; அவன் ஒரு வெடிச்சபய' அவன் நெனைச்சா இப்ப நம்மை வூட்டுக்குப் போக வச்சுப்புடலாம் எப்படியோ அவன் மேலே அதிகாரிகளுக்கு ஒரு மயக்கம் கண்டுபோச்சு பெரிய நாட்டாமைக்காரன் மாதிரியில்ல பரிபாலனம் செய்யிறான்!...'

'ஏமூதேவி சர்க்காரு பணம் லெவிக்குமா? சோத்துக்கு தாளம் போட்டதுகளைக் கொண்டாந்து கூலிக்கிவெச்சா இப்படித்தானே; ரத்தம் ஊறிட்டா உருமுவாங்க. வயிறு வத்திப் போயிட்டா உயிரைக் கொடுக்கிறேன்பாங்க இதுங்க பொழைப்பே இப்படித்தான்'...வேலை பார்க்கிறவுங்களை இப்படி சுளீர் சுளீர்னு பேசுறானே பாவி .....' செண்பகம் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே செந்தூர் அருகே வந்துவிட்டான்

'ஒரு ஆளு குறையுதே கொத்தனாரே நீங்க என்னமோ யோசிக்கிறீங்க!'' பேசினானே தவிர, செந்தூரின் பார்வை குடிசைக்குள்தான் இருந்தது.

"பார்த்தீங்களா, பார்த்தீங்களா! அந்த ஆளு பார்க்கிறதை!'' குடிசைக்குள்ளிருந்தே எரிச்சலோடு முணங்கினாள் குருவம்மா.

"என் நெலமையைச் சொல்லிவிட்டேன். அதுக்கு மேலே நா என்ன செய்றதுக்கு இருக்கு ... செண்பகச் சேர்வையின் பதில் வாசலில் நின்ற செந்தூருக்கும் உள்ளேயிருந்த குருவம்மாவுக்கும் சேர்ந்த பதிலாக இருந்தது. செந்தூர் போய்விட்டான். அவன் தலை மறையும் வரை காத்திருந்துவிட்டுசெண்பகஞ் சேர்வை குருவம்மாவுடன் பேசினான்.

"அம்மா இது தோளிலே உக்காந்து செவிபக் கடிக்கிற காலமம்மா! இங்கெ இருக்கிற ஆயிரம் கலிகளுக்கும்விதி, பிராப்தம் எதுவும் தனியா இல்லே. செந்தூரின் பேச்சுத்தான் இப்ப நமக்கெல்லாம் விதி. விதியோட விளையாடுறப்பிலே நர்ம இல்லே. தெரிஞ்சுக்க! வெட்டிப் பேசுறதிலே ஓங்கம்மாவையும் மிஞ்சிட்டே போ!''

"பயந்து பயந்து நாம என்னத்தைக் கண்டுட்டோம் அப்பா!''

"பயம் வேறே, மரியாதை வேறம்மா! வலுவிலே நாம ஏன் ஒரு எதிரியை சம்பாதிச்சுக்கணும். ஆயிரம் பேர் நமக்கு சிநேகிதமாக இருந்தாலும் நம்மை அவங்க எப்போதாவதுதான் பார்ப்பாங்க; ஆனா நமக்கு ஒரு எதிரி இருந்தா போதும் அவன் நமக்கு அடிக்கடி அளிம்பு பண்ணிக்கிட்டே இருப்பான்; தூங்கவிடமாட்டான். எதுக்கு இதெல்லாம் பொழைக்க வந்த எடத்திலேன்னு பார்க்கிறேன்', கனிவாகச் சொன்னான் செண்பகம்.

குருவம்மாவின் துடுக்குத்தனம் செண்பகச் சேர்வைக்குப் பிடிக்கவில்லையென்றாலும் உள்ளூர அவளது தூய்மையை—— அன்னிய ஆடவர்களை நெருங்கவிடாத கெட்டிய உள்ளத்தை நினைத்துப் பூரிக்கத்தான் செய்தான்.

"கிளியை வளர்த்துப் பூனையிடம் கொடுத்தேனே நானொரு புத்தி கெட்டவன். என் பிள்ளை புலியாப்பாயிது வேத்தாளைப் பார்த்தா: அதைக் கெட்டுப் போனவள்னு சொல்றானே அந்தச் சொரணை கெட்டவன்; அவனுக்குச் சாதகமா நீதியும் தூங்கிப் போச்சு. சக்குவெப் பார்த்தாலே தெரியுமே எம்மக கெட்டுப் போனவ இல்லேன்னு!'' குருவம்மாவின் கடந்த காலத்தை நினைத்து செண்பகம் பொருமினான்.

மனம் துன்பப்படும்போதும், துள்ளிக் குதிக்கும் போதும் மனிதன் நிலைமறந்து குழந்தையாகிவிடுகிறான் அப்போது அவன் வெறித்தனமாக கதறுகிறான், அல்லது முச்சடைக்கச் சிரித்து குமுறுகிறான். எதுவும் அளவு கடந்துவிட்டால் அது ஒருவகைப் போதையாகி விடுகிறது.

ஃ ஃ ஃ

வெளியில் நின்றுகொண்டிருந்த செண்பகம் குடிசைக்குள் நுழைந்தான். தூசி படிந்து கிடந்த அவளது கணவனின் படத்தை குருவம்மா துடைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

"பெண்கள் சபலைகள்; பட்ட துன்பங்களை இலகுவில் மறந்துவிடுகிறார்கள் என்று நினைத்த செண்பகஞ்சேர்வை பார்த்தும் பார்க்காததுபோல் குடிசையை விட்டு வெளியேறிவிட்டான்.

(தொடரும்)

தொலைபேசிஎண் கடை:33213 இல்லம் 31922
தரம்நாடுவோர் தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு: விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11

தனிச்சிறப்பு: சிலேபி, கெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்
உரிமையாளர் பே. தேவசகாயம்
கிளைகள்: 26. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி
12. அழகர்கோவில் சாலை. 72. CL வுன்ஹால்ரோடு, மதுரை.

மணப் பந்தலில் மந்திரம் ஓதிய வரதாச்சாரியார், 'சந்தானவிருத்தி' வாழ்த்துக் கூறத் தவறவில்லை!

நெருப்பில் நெய்யைத் தொடர்ந்தாற்போல் ஊற்றிக் கொண்டே 'புத்திர சந்தானம் பிராப்தி' என்பதைச் சமஸ்கிருதத்தில்தான் சொன்னார்; மறந்தும் தமிழில் சொல்லிவிடவில்லை!

ஆசீர்வாதம் பலந்தான்; ஆனால் ஜமீன்தார் வீட்டில்சந்தானத்தைத்தான் காணவில்லை!

ஆண்டுகள் ஒன்று, இரண்டா... ஒன்பது ஆண்டுகள்!

சீமாட்டி செண்பகவல்லியின் கணவன் — சேத்பவனத்து ஜமீன்தார்!

அவருக்கு இவள் — சிரிக்கும் செண்பகம்! இவளுக்கு அவர் —புதையல்!

வசந்தமும்—தென்றலும் வாழ ஒப்பந்தம் செய்து கொண்டு பூஞ்சோலையில் புகுந்தது போல அவர்கள் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டனர்; சோலையில் சூறுவளி வீசும் என்பதை அவர்கள் நினைக்கவே இல்லை.

செண்பகவல்லி அழகி என்பதற்காக மட்டுமல்ல —அவள் அதிர்ஷ்டக்காரி; அழியாத மாங்கல்யம் உடையவள் என்றும் ஜாதகம் பார்த்த வரதாச்சாரி கூறவே, திருமணம் வெகு விரைவாக நடந்தது!

"எனவ ஜமீன்தார்வாள் — உங்களுக்கு என்ன குறைச்சல்? எல்லாம் நிறைய இருக்கு...ஒரு புத்திரபாக்கியம் மட்டும் பகவான் அனுக்கிரகம் பண்ணிட்டா.....

வரதாச்சாரியார், ஜமீன்தாரைப் பார்க்கும் போதெல்லாம் பாடும் பல்லவி இது!

"குழலினிது யாழ் இனிது என்பர்—தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" — சேத்பவனத்து சிவன் கோயில் ஸ்தல வரலாறு சிருஷ்டித்த செல்லையா பண்டிதர், ஜமீன்தாரின் பண உதவியை மறக்கவில்லை என்பதற்காக அவரைக் காணும் போது ஒப்புவிக்கும் திருக்குறள் இது!

"காளியம்மன் கோயில் கரகம் காப்புக் கட்டியாச்சு; உதவணும் அம்பாளுக்கு! செஞ்சாத்தான் குழந்தை பிறக்கும்—வம்ச விருத்திவரும்" —உற்சவ யாசகக்காரன், ஜமீன்தாரிடம் வசூல் நோட்டைக் நீட்டும்போது மறைமுகமாகக் கூறும் பயமுறுத்தல் இது!

"சாமி ஏழைக்கு உதவுங்க; குழந்தை குட்டியெல்லாம் சேமமாயிருக்கும்" — பிச்சைக்காரனின் வாழ்த்து வீட்டு வாயிலில்; 'குருட்டுப் பயல்' என்று ஜமீன்தார் முணு முணுக்க இது ஒரு வாய்ப்பு!

"உனக்குக் கிடைச்ச இடம் பொன்னான இடம்; தங்கம் மாதிரி மாப்பிள்ளை, எல்லாம் இருந்தும் காலா காலத்தில் ஒரு குஞ்சு குளுவானை கொடுக்கமாட்டேங்கருனே பாழாய்ப் போன கடவுள்' — செண்பகவல்லியின் தாயார் அர்ச்சித்தாள் இப்படி!

"ஒன்பது வருடமாச்சு...ஒன்ணையும் காணோமே செண்பு —தோழியின் கிண்டல் இவ்விதமாக!

"நம்மோட பெயர் சொல்ல ஒருகுழந்தையை ஆண்டவன் அருளமாட்டானா?"

"வம்சம் நம்மோடு தீர்ந்தது, நானும் என்னென்னமோ செய்துட்டேன்; உம்...... கடவுள் நினைப்பு எப்படியோ?" ஜமீன்தாரும் செண்பகவல்லியும் உதிர்த்த சோகத் தொகுப்பு!

கன்னியாகுமரியில் கடலாடி—காசிவிஸ்வேசுரைப் பணிந்து காவி கட்டிய ஆசாமிகளின் காலில் விழுந்து — பிள்ளை வரம் கேட்டுப் பார்த்தாகி விட்டது; வரம் தேடி அலுத்த பிறகு 'வள்ளல்' என்ற பட்டம்தான் மிச்சம்!

ஜமீன்தாருக்கு வயது ஏற ஏற வருத்தமும் ஏறிக்கொண்டே போயிற்று

அந்தப் பெரிய ஜமீன் — அழகான பங்களாக்கள் — அருமையான மோட்டார்— அடிமைக்காரர்—'இந்த அந்தஸ்துகளை அனுபவிக்க நமக்கு ஒரு குழந்தை இல்லையே'— இதை நினைப்பார். அடிக்கடி என்று சொல்ல முடியாது — அன்றாடம் அந்தப்புரத்தில் இந்த ஏக்கம் எதிரொலித்தது!

ஃ ஃ ஃ

ஒருநாள், வரதாச்சாரியார் — ஜமீன்தார் சந்திப்பு; அதன் விளைவு...

அலங்காரமான பந்தல்கள்...... எங்கும் அக்கினிக் குண்டங்கள்........அதைச் சுற்றிலும் அந்தணர்கள்... நெருப்பில் நெய்க் குடங்கள்...'நமகா' மந்திரத்தின்எதிரொலிகள்...

ஒரே பக்தி வெள்ளம்!

முப்பத்து முக்கோடி தேவர்கள்; நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் —

கந்தர்வர், கின்னரர், கிம்புருடர்...அனைவரும் புரோகிதர் நாவில் நர்த்தனமாட— பீதாம்பரம், பட்டுச் சேலை; பசுமாடு இவைகளைச் சீமாட்டி வழங்க—பாரியாள் சமேதராய். பிராமணோத்தமர்கள் வாங்கிச் சென்றனர்;

காட்சி ரம்மியந்தான்—தானம் பலம்தான்—செலவு அதிகம் தான்; ஆனால் புத்திர காமேஷ்டியாகத்தின் பலனும் பூஜ்யமாகிவிட வேண்டுமா?

ஜமீன்தார் சோகத்தில் மிதந்தார்!

ஒரு நாள் மாரியம்மன் கோயில் பூசாரி மருதமுத்து—ஜமீன்தார் பேட்டி நடந்தது!

அதன் விளைவு......

குல தெய்வமான மகமாயிக்குப் பொன் விளக்கும் புதுமாதிரியான வைர நகைகளும் உபயம் செய்தார்!

ஜமீன்தாருக்கு ஆண்டவன் சக்தியிலும் அவநம்பிக்கை பிறக்கத் தொடங்கிற்று!

"உண்டு—இல்லைஎன்று பார்த்து விடுவது ஜமீன்தார்வாள்;

ஆண்டவன் செயல் அலாதியா இருக்கட்டும்னு; அதுக்காக நாம் சும்மா இருந்தா காரியம் நடக்குமா?"

"என்னய்யா செய்ய?"

"எனக்கு ஒண்ணுபட்றது"

"என்ன படுகிறது?

"தசரதன் 'புத்திர காமேஷ்டி யாக'த்திலே என்ன நடந்தது தெரியுமோன்னோ?"

"என்ன நடப்பது...தசரதன் பத்தினிகள் யாரோ ரிஷிகளிடம்......"

"சே சே; அந்த இராமாயணம் இல்லேனு"

"வால்மீகி இராமாயணத்திலே அப்படித்தானே இருக்கிறதாம்?"

"வால்மீகியாவது; நம்ம தமிழாள்—கம்பர் பாடிய இராமாயணப்படி பாருங்கோன்னு!"

"அதை, மனுஷன் படிப்பாராய்யா?'

'ஏன்னு?"

'அந்தத் தமிழ் நமக்குப் புரியாது!'

"நான் சொல்றேன் கேளுங்கோ; அக்னியிலே தேவாத்கள் கிளம்பி அவிர்ப்பாகத்தைத் தசரதனிடம் கொடுக்க—அவன் அதை மனைவிகளிடம் கொடுக்க—அவர்கள் வயிற்றில் கரு உற்பத்தியாயிற்று!"

"அவிர்ப்பாகமா? நம்ப புத்திரகாமேஷ்டி யாகத்தில் அப்படி ஒன்றும் நடக்கவில்லையே'.

"அப்படிக் கேளுங்கோ; அவிர்ப்பாகம் ரகசியம் தெரியாது; ஆண்டவன் தயவில்லாமலே அதைத் தயாரிக்க ஓர் அருமையான முறை இருக்கு!'

"என்ன சாமீ சொல்கிறீர்?"

'அவிர்ப்பாகம் செய்யும்முறை என்னிடம் அகப்பட்டுவிட்டதுன்னேன்!"

"அப்படியா! ஆச்சரியம்..."

"ஆச்சர்யம்தான்; காரியம் வெற்றி; கைமேல் பலன்!"

"உண்மையாகவா?"

"அவிர்ப்பாகத்தை நானே தயாரிக்கத் துணிந்து விட்டேன்?"

"நீரா?"

"நீராவது—நெருப்பாவது? பாருமே என் திறமையை; ஜமீன்தார்வாள் — அவிர்ப்

கருணாநிதி

பாகம் என்பது ஓர் அருமையான தெய்வீக லேகியம்; அருள் நிறைந்த திவ்யப் பிரசாதம்; ஆண்டவன் கருணாகடாட்சம் பரிபூரணமாக அதில் கலந்து ஒரு பஞ்சாமிர்தமாகி விடுகிறது!'

"அதை ஏன் இதுவரை செய்யவில்லை?'

"காலம் வரவேண்டாமா? தசரதனுக்கு காலம் வந்து தானே ஸ்ரீ ராமர் கருவில் வந்தார் ஜமீன்தார்வாள்; நம்மநல்ல காலம் பாருங்கோ —நேற்று நம்பவீட்டுப்பரணையைச் சுத்தப்படுத்தினேன்; அதிலே ஒரு பழைய சுவடி அகப்பட்டதுன்னு; அதிலே இருக்கு அவிர்ப்பாக இரகசியம்!'

"செய்யும் முறை?"

"சாமான்யமில்லேன்னு; ரொம்பச் சிரமம்!'

"பணந்தானே செலவாகும்?"

"மனுஷன் படவேண்டிய கஷ்டம் அவ்வளவு இருக்கும்; மூளைக்கு வேலை—மூலிகை தேடற வேலை—எல்லாம் தேவ மூலிகைகள்!"

"கஷ்டத்துக்குத் தக்க சன்மானம் கொடுத்தால் போகிறது!'

"நல்லாச் சொன்னேள்; எனக்கு ஒரு பைசா வேண்டாம்; உங்களுக்கு ஒரு குழந்தை அவதரிச்சா...எனக்குக் கோடி பவுன் கிடைச்ச மாதிரி!"

"மூலிகைகள் மட்டும் போதுமாக்கும்?"

'போதாது; பத்தரை மாற்றுத் தங்கம் பாதி பச்சிலைச் சாறு பாதி—பத்துநாள் ஆரியப்பிரகாசத்தில் வைத்துப்பக்குவப் படுத்த வேண்டும்..."

'பணம் எவ்வளவு ஆனாலும் சரி —எனக்கு வேண்டியது.....';

'எல்லாம் ஜெயமாக முடியும் பாருங்கோ; பலன் கை மேல்......!'

ஜமீன்தாரிடம் வரதாச்சாரியார் அவிர்ப்பாகம் தயாரிப்பதற்கு இரண்டாயிரம் ரூபாய் பெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

"ஆனால் ரகசியம் உங்கமனைவிக்குக்கூடத் தெரியக்கூடாது; விஷயம் வெளியானால் மருந்து சக்தி போய்விடும்" என்ற எச்சரிக்கையையும் ஜமீன்தார் மனத்தில் சேர்த்துவிட்டுப் போனார்.

ஜமீன்தார் முகத்தில் வெற்றி ரேகைகள்; சிரிப்பு வெடித்துச் சிதறியது!

ஃ ஃ ஃ

"குழந்தைக்கு இந்தச் சட்டையை மாட்டு; ஏய் டிரைவர்—தம்பியைக் காரில் வைத்து ஊர் சுற்றிவாடா; ஓய் பத்தரே—குழந்தைக்கு இந்தச் சங்கிலி நன்றாக இல்லை; கிருஷ்ணபகவான் போட்டிருந்தமாதிரி ஒரு வைர மாலை செய்து கொடு; அப்படியே இருக்கணும் அசல் மாதிரி; ஆமாம— சொல்லி விட்டேன்; செண்பகம் — சிரிக்கிறான் பார் குழந்தை; என் கண்ணுப் பயலே—ஒரு கட்டி முத்தம் கொடு; வெள்ளியிலேயே உனக்கு ஒரு மோட்டார்— தங்கத்திலே குதிரை — வைரத்திலே சின்ன சைக்கிள் —போதுமா போதாதா? சரி—இரத்தினத்திலே ஒரு தொட்டில் என் கண்ணுக்குட்டி—சிரிக்காதே! செண்பகம்—நம் அய்யரின் அவிர்ப்பாகத்தின் மகிமையே மகிமை!"

"என்ன புலம்புகிறீர்கள்?" என்று அலறியடித்துக் கொண்டு எழுந்தாள்—பக்கத்தில் படுத்திருந்த செண்பகவல்லி!

"...ஒன்றுமில்லை" என்று கண்ணைக் கசக்கினார்—கனவிலே சொக்கி இருந்த ஜமீன்தார்!

ஃ ஃ ஃ

அதே இரவு; மாரியம்மன் கோயில் பக்கம் பயங்கரமான இருள்; பணக்காரனின் நெஞ்சம் போல வானம் கருப்புமழை பொழிவது போன்ற காட்சி; இடையிடையே மின்னலின் வைர வெட்டுக்கள்; சில சில கோடுகள் கிழிக்கின்றன!

அந்தத் திடீர் வெளிச்சத்தில் ஓர் உருவம் அசைவது தெரிகிறது; கை கால்கள் இரண்டிரண்டுதான்; ஆனால், அது மாரியின் உலவல் அல்ல: அந்த உருவம் கோயில் கதவண்டை வந்து நிற்கிறது; கதவு திறக்கப்படுகிறது— கர்ப்பக் கிரகத்தில் நுழைகிறது; ஜமீன்தார் செய்து வைத்த பொன்விளக்கின் ஒளியில்... அந்த உருவம் பூசாரி மருதமுத்துதான் என்று கண்டுபிடிக்க முடிகிறது! விளக்கு அணைகிறது!

ஃ ஃ ஃ

மறுநாள் காலை ஜமீன்தார் எழுகிறார்; 'மாரியம்மன் கோயில் திருட்டு என்ற செய்தி காதில் விழுகிறது; மூவாயிரம்ரூபாய் பெறுமான சொத்துக்கள் களவு; அன்று மாலை சேத்பவனத்தில் சிவப்பு தொப்பிக்காரர்கள் படை குவிகிறது; மாரியம்மன் வாக்கு மூலம் கொடுக்க வில்லை;

அது தெரிந்துதானே பூசாரி இந்தக் காரியத்தில் துணிவாகப் புகுந்தார்!

கள்வனைக் கண்டுபிடிக்காமல் ஜமீன்தார் விடமாட்டார்; முக்கியமான ஓர் ஆளிடம் சந்தேகமாம்; பூசாரியைக் கூட ஜமீன்தார் சந்தேகப்படுகிறாராம்—" இது ஊர் வதந்தி!

ஃ ஃ ஃ

"பூசாரி — ஜமீன்தாரண்டே சொல்லிவிட்டேன்; நீதான் வழி சொல்ல வேண்டும்."

"என்ன சாமி பெரிய காரியம்; என்கிட்டே ஒரு மருந்து இருக்கிறது; அதைச் சாப்பிட்டால் மலடிகூடப் பிள்ளை பெறுவாள்; ஆனால், ஆம்பிளைதான் அதைச் சாப்பிடணும்!"

"பேஷா! ஜமீன்தாரையே சாப்பிடச் சொல்றேன்,மருதமுத்து கண்டிப்பா பிள்ளை பிறக்குமா?'

"ஏழை மருந்தாச்சேனு எளக்காரமா நினைக்காதீங்க!"

"இந்தா இருபது ரூபாய்—வச்சுக்கோ; மருந்து பலன் அளிச்சா ஆயிரம் ஆயிரமாக நான் வாங்கித் தருகிறேன்!'

"மருந்து பலன் அளிச்சா நான் பிழைச்சமாதிரி; என்னமோ மகமாயி இருக்கா!"

"ஆனா மருதமுத்து — மருந்து நீ கொடுத்ததா ஜமீன்தார் கிட்டே சொல்லிவிடாதே!"

"நான் யாருகிட்டேயும் சொல்ற விஷயமில்லீங்க இது; நீங்களே பேரு வாங்குங்க!"

ஃ ஃ ஃ

வரதாச்சாரியார் அளித்த அவிர்ப்பாகத்தைப் பாலில் கலந்து இரகசியமாகச் சாப்பிட்டுவிட்டு — வாசனை வராமல் வாயைக் கழுவித் தாம்பூலம் தரித்து—வரதாச்சாரியார் சொன்னபடி அந்தப்புரத்தை நோக்கி நடந்தார் ஜமீன்தார்.

அன்றிரவு ஜமீன்தாருக்கு ஒரே ஆனந்தம்; செண்பகம என்றுமில்லாத இன்பமொழிகளையெல்லாம் கேட்டு ரசித்தாள்; பசும்பாலை அவளிடம் நீட்டுவதும—அவள் அதரங்களில் பால் கிண்ணம் படுவதற்குள் அதைத் திரும்ப எடுத்து அவளை ஏமாற்றுவதும் — அவளை அப்படியே தூக்கி மஞ்சத்தில் எறிவதும் ...இப்படி ஒரே வேடிக்கை! இரவு மணி பன்னிரெண்டு அடித்தது.

"செண்பகம்—நமக்குப் பிள்ளை பிறந்தால் என்ன பெயரிடுவது?"

சீமாட்டி சிரித்தாள்!

"என்ன சிரிக்கிறாய்?"

மீண்டும் அவள் சிரித்தாள்!

"சிரிப்பு வந்தது—சிரித்தேன்!" —சீமாட்டியின் சிரிப்பு அடங்கவில்லை!

ஜமீன்தார் அவளை அணைந்துத் தூக்கிக் கொண்டார்!

"என் கற்கண்டே— பாற்கடலே— பொற்கொடியே' என்றெல்லாம் நவயுக வர்ணனை உதிர்த்தார்; அவர் வாய் குழறிற்று; செண்பகத்தைத் தூக்கிக்கொண்டு ஓடினார்; அவ்வளவுதான் — இருவரும் தரையில் சாய்ந்தனர்!

சீமாட்டி பரபரப்பாக எழுந்தாள்; ஜமீன்தார் முகத்தை சிரித்தபடியே தூக்கினாள்; அவர் வாய் இரத்த அருவியாகக் காட்சியளித்தது!

வரதாச்சாரி தயாரிப்ப

வியாபாரம்

தாகச் சால்லி — மருதமுத்துவிடமிருந்து வாங்கிக்கொடுத்த 'பிள்ளைவர மருந்து' தன் வேலையை முடித்துக் கொண்டது!

"குண்டடிபட்ட சிங்கம்போல ஜமீன்தார் ஒருமுறை வாய் திறந்தார்...பிறகு திறக்கவே இல்லை!

விடிந்தது!

சேத்பவனம் அழுதது...பூசாரி மருதமுத்து சிரித்தான்!

ஜமீன்தார் திடீரென இறந்த காரணம் யாருக்கும் தெரியாது; திருட்டு வழக்கில் தான் அகப்பட்டுக் கொள்ளாமல் இருக்க மருதமுத்து செய்துதந்த மருந்தின் வேலை அது என்பது எவருக்கும் தெரியாது!

வரதாச்சாரி தன் பெண்ணுக்கு கொடுத்த வரதட்சணை ரூபாய் இரண்டாயிரமும், அவிர்ப்பாகம் செய்து தருவதாக ஜமீன்தாரிடம் வாங்கிய பணம் என்பதும் மருதமுத்துவுக்குத் தெரியாது!

பூசுரருக்குப் புன்சிரிப்பு—பூசாரிக்குப் பெருஞ் சிரிப்பு!

ஜமீன்தாரின் உடலைத் தின்று சுடலையில் கிளம்பும் புகைப் படலம், காற்றோடு கலந்தது —'பிள்ளையோ பிள்ளை' எனக் கீழ்ஸ்தாயியில் ஒலித்தது போலிருந்தது'

[2]

வரதாச்சாரி தந்த வரப்பிரசாத மகிமையால் சேத்பவனத்து சீமாட்டியின் சிங்கார வாழ்வு அஸ்தமித்தது; ஆனால், இருட்டிலும் நிலவு உண்டே....... அதுதான் குழந்தை கோகிலா!

பிரேமா கோகிலாவை விற்பனை செய்ய வரும்போது நடந்தது இது!

பிள்ளையில்லாக் குறையால் வாடிய சேத்பவனத்து ஜமீன்தார்—பிள்ளையைக் காப்பாற்றும் வகையறியாது வதங்கிய பிரேமா—இவர்கள் படைப்பின் அவலட்சணத்திற்கு அடையாளங்கள்!

பிரேமா, 'பிள்ளையோ—பிள்ளை'யெனக் கூவினாள்—மார்க்கெட்டில் 'கீரையோ கீரை'யென்று கூறுகின்ற மெட்டில்!

பிரேமா, மனித மார்க்கெட் உண்டாக்கினாள்; ஆனால் அவள் குழந்தையை விற்பதற்காக அங்கு வரவில்லை சீமாட்டியின் பங்களாவில் ஒரு வேலைக்காரி பதவியில் அமர எண்ணினாள், குழந்தையை வளர்க்க அவளுக்கு அந்த வழி ஒன்றுதான் இருந்தது

ஆனால், சீமாட்டியின் கருணை எல்லைமீறிவிட்டது; அவள் குழந்தை தனக்கே வேண்டுமெனக் கேட்டாள்; குழந்தையிடம் அவள் காட்டிய ஆசை; பிரேமாவின் வாழ்வைக் கத்தரித்துக் கொள்ளத் தூண்டிற்று!

உண்மையிலேயே சீமாட்டியின் நினைப்பு அதுவல்ல!

"எண்ணியபடியே எதுவும் நடக்காது என்பர் — வேதாந்த விற்பன்னர்! 'நடப்பதெல்லாம் ஆண்டவன் செயல்' என்றால், பிரேமாவின் சாரமில்லா ஜீவியம், அந்தப் பாவியின் செயல் தானா' என்று கேட்கத்தான் தூண்டும்

பிரேமா மட்டும் கடைசியில் ஆண்டவன் தலையில் பாரத்தைப் போடவில்லை. வாழ்க்கையில் ஏற்பட்ட வேதனை அவளாகத் தேடிக் கொண்டது என்பதை உணர்ந்தாள்; உணர்ந்த பின்னர்தான் சேத்பவனத்தை நாடி வந்தாள்.

(8-ம் பக்கம் பார்க்க)

வியாபாரம் ....

[7ம் பக்கம் தொடர்ச்சி

பிரேமாவை வேலைக்காரியாகச் சீமாட்டி ஏற்றுக்கொண்டிருந்தால், குழந்தை கோகிலாவுக்காகவாவது பிரேமா உயிரைப் பிடித்துக் கொண்டிருப்பாள்.

தன்னுடைய வேலையை சீமாட்டி வலுவில் ஏற்றுக் கொண்டபோது அவளுக்கு ஏன் வாழும் ஆசை; அதன் காரணமாகத்தான், சீமாட்டி அளித்த 500 வெண் பொற்காசுகளை பிரேமா பெற்றுக் கொள்ளவில்லை.

சீமாட்டியிடம் பிரேமா விடை பெறறுக் கொள்ளும் பொழுதுமட்டும் கோகிலாவை மூன்றுமுறை பார்த்தாள்; அதற்குமேல் அவள் பார்க்க விரும்பவில்லை; அவள் கண்களில் நீர் இல்லை; தொண்டைக்குழி மாத்திரம் விம்மிற்று; எரிமலை தனது கடைசி நெருப்புக் குழம்பை வாரி இறைக்கும் போதுகூட அவ்வளவு ஜுவாலை இருந்திருக்காது — பிரேமாவின் மூச்சிலே இருந்ததுபோல; உலகத்தைக் கவிழ்க்க கங்கணம் கட்டிக் கொண்ட ஒரு பூகம்பத்தைப்போல அவளது இதயம் குலுங்கியது

பிரேமாவுக்கும் குழந்தை கோகிலாவுக்கும் நடுவிலே ஒரு மெல்லிய மின்சாரக் கம்பி ஓடிற்று; பிரேமா அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள்!

குழந்தை கோகிலா பேசுவது போலிருந்தது, ஏதோ கதை சொல்வதுபோல் தெரிந்தது; பிரேமா அந்தக் கதையைக் கேட்டாள்; அவள் மட்டும் தான் அந்தக் கதையைக் கேட்க முடியும்; மூன்று மாதக் குழந்தை சொன்ன வரலாற்றிலே சற்று லயித்தாள்; கோகிலாவின் கொவ்வை இதழ்கள் அசைந்தன— கதை ஆரம்பமாயிற்று!

ஃ ஃ ஃ

பிரேமாவுக்கு வயது 15; நல்ல அழகி' என்று ஊரார் சொல்வார்கள்; அவளும் தன்னைக் கண்ணாடியில் பார்க்கும்போதெல்லாம் சிறிது கர்வமடைவது வழக்கம்.

'பிரேமா — ஆமாம் பிரேமாவே தான்; மிருதுவான பேச்சுக்காரியே தவிர, பாகுமொழி பேசிப் பழிவாங்கும் பத்திரகாளி அல்ல!

பிரேமையைக் கிதமாக மாற்றப் பேசுகிருள்; இன்பத்தைப் பூசியிருக்கும் இரண்டு இதழ்கள்—ஒளியை மொண்டு நிற்கும் கண்கள்—வாழ்வின் ஜீவநாடியே 'பிரேமா' என்ற வார்த்தைதான்!

எண்ணங்களை அசைக்கும்தென்றல் காற்றுத்தான் 'பிரேமா' என்ற பெயர்—கன்னங்களில் மின்னும் கவின் இதயத்தைக் குத்தும் ஈட்டியாக ஏன் அமைய வேண்டும்?

''பூங்காற்றே—பொற்கொடியே' என்றெல்லாம் கண்ணபிரான் வாணித்தான்!

கண்ணபிரான் ஓர் எழுத்தாளன்; வைதிக வரதாச்சாரியின் மகன்!

வரதாச்சாரி மாடி வீட்டில் வாழும் அதிபர்; அதோடு ஞானசிரியர்; அவரது மகன் கண்ணபிரான் எழுத்தால் பட்டம் பெற்றதில் அதிசயம் என்ன இருக்க முடியும்?

பிரேமாவைப்பற்றி எழுத்தாளர் கண்ணபிரான் தீட்டிய வர்ணனை, இரவல் சரக்கு; யாரோ ஒருவர் யாருக்கோ எழுதியது; இன்றைய எழுத்தாளர் பலர் கைக்கொள்ளும் முறையைத்தான் கண்ணபிரானும் கடைப்பிடித்தான்;

ஆனல் அவனது திருட்டுத் தொழில் பிறப்பாலும்—பணத்தாலும் மறைக்கப்பட்டிருந்த காலம் அது!

பிரேமாவுக்கும் கண்ணபிரான் மீது அளவு கடந்த மோகம்; கண்ணபிரானும் — பிரேமாவும் காதலராக வாழத் திட்டம் தயாரித்தனர்,

பிரேமா ஏழைதான்; ஆனல், 'வரதாச்சாரியின் மருமகளாகப் போகிறேமே' என்ற துணிவு மட்டும் உண்டு.

அவள் தன் ஓட்டை வீட்டில் உட்கார்ந்திருக்கும் போது, கண்ணபிரானுடன் மேல் மாடியில் உலவுவதாக நினைத்துக் கொள்வாள்!

பிரேமா—ஒரு குடியானவப் பெண்! கண்ணபிரான்—பழுத்த வைதீகரின் பிள்ளை!

இருவருக்கும் நடுவே சாதி!

'சாதிச் சனியன் என்றதொரு கட்டுரை எழுதி இருந்தான் கண்ணபிரான்; பிரேமாவை அவன் ஏமாற்றமாட்டான் என்பதற்கு அந்தக் கட்டுரை ஒரு சாட்சி!

'சாதித் திமிருக்கு இடம் கொடுக்க மாட்டேன் என்று கண்ணபிரான் எழுதிய கடிதங்கள் பல!

'பிராமணன் என்கின்ற உயர் சாதிக் கர்வம் என்னிடமில்லை பிரேமா; நாம் இருவரும் 'காதல்' எனும் ஜோதியால் புனிதமாக்கபபட்டு விட்டோம்; காதலுக்கு உயிர் கொடுத்த தியாகச் சொரூபிகளின் அடிச்சுவடுகளே நமது பூசைக்குரியன; விதி நம்மைப் பிணைத்து விட்டது—அது நம்மைப் பிரிக்க முடியாது'' என்றெல்லாம் கூறினன்!

பிரேமா, காதல் பாதையில் கால் வைத்து விட்டாள்.

கண்ணபிரான் விஷயத்தில் வரதாச்சாரி தலையிடவில்லை!

பிரேமாவின் தாயார் ஒரு தள்ளாத கிழவியானலும், பிரேமாவைப பல முறை எச்சரித்தாள்: கண்ணபிரான் அய்யர்—அவனுக்கும் நமக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது—வீணை அவனை நம்பிக் கெட்டுப் போகாதே பிரேமா'' என்று அடிக்கடி சொல்லி வந்தாள்.

'எல்லாம விதிப்படிதான் நடந்து திரும்; தயவு செய்து என்னைத் தடுக்கவேண்டாம்'' எனக் கேட்டுக் கொண்டாள் பிரேமா,

கனியை, 'கசக்கும்' என்று சொல்வது போலவும், 'அமிர்தத்தை 'விஷம்' என்று கூறுவது போலவும் இருந்தது—கிழவியின் பேச்சு பிரேமாவுக்கு!

பிரேமாவின் எண்ணக் கோட்டைகள், உச்சியை முட்டும் அளவுக்கு உயர்ந்தன; அடிக்கடி சந்திப்புகள்—கொஞ்சு மொழிகள்—கோலாகலங்கள் —இவைகளுக்குக் குறைவே இல்லை

'பிரேமா—'உன்னை நான் மனப்பூர்வமாக நம்பியிருக்கிறேன்; ஆனல் இலவு காத்த கிளியாக ஆகி விடுவேனே என்னவோ ?''

''ஏன் கண்ணு அவ்வளவு பயம்? எனக்கு முன்பு முந்திக்கொள்ளப் பார்க்கிறீர்களா ?'

''இல்லை பிரேமா; எதிர்த்த வீட்டுக் கமலாவின் விஷயத்திலிருந்து பெண்களிடம் பழகுவதிலேயே எனக்குப் பெரிய பயம் ஏற்பட்டு விட்டது!''

எதிர்த்த வீட்டுக் சமலாவைப் பற்றிய கதை மிக ருசிகரமானதுதான்; கமலாவையே மணப்பதாக சாந்தாராம் உறுதி செய்து கொண்டிருந்தான்; அவளும் அப்படித்தான் சொன்னுள்; ஆனல், அவள் மாலையிட்டது மஞுகரனுக்கு; இதுதான் கதையின் முக்கியக் கட்டம் — இதைத்தான் கண்ணபிரான் பிரேமாவிடம் இடித்துக் காட்டினன்.

பிரேமா கண்ணபிரானின் ஆலிங்கனத்திலேயே மெய் மறந்து விடுவாள்; அதையே சொர்க்கமென்று நினைப்பாள் காதலின் வலிவு தான் என்னே!

கேவலம் ஒரு குடியானவன் வீட்டுப்பெண்ணை உயர்குடிப் பிறந்த வரதாச்சாரியின் மகன் மணந்து கொள்வதாகச் சத்தியம் செய்வதென்றல், 'காதல் — தெய்வீகம் பொருந்தியது என்று ஏன் சொல்லக்கூடாது?' என்று தனக்குள்ளேயே கேட்டுக் கொள்வாள் பிரேமா!

காதல் வளர்ந்தது—கொழுந்து விட்டெரிந்தது! அரும்பின் முனைப் பிடிப்புகள் விலகின—மலர் மணம சிந்திற்று மகரந்தம் உதிர்ந்தது — பொன் பொடிகள் தூவிய புத்தம் புதிய இதழ்கள் விரிந்தன!

தள்ளாத வயதில் காலத்தோடு போராடிக் கொண்டிருந்த அந்தத் தாயின் போராட்டத்திற்கும் ஒரு முடிவு ஏற்பட்டது; அவள் காலம் முடிவடைந்தது; 'புத்திசாலித்தனமாக நடந்து கொள் பிரேமா' என்று மரணத்தறுவாயிலும் அவள் கூற மறக்கவில்லை!

''விதிப்படி நடக்கும் அம்மா'' என்று பிரேமாவும் பதில் சொல்லத் தயங்கவில்லை

பிரேமாவின் வாழ்வில் தனிமை என்பது ஒரு கசப்பான மருந்தாயிற்று; எத்தனை நாளைக்குத்தான் கள்ளக் காதலர்களாக இருக்க முடியும்? அவள் திருமணத்திற்குத் திட்டம் போட்டாள்; கண்ணபிரானிடம் ஒருநாள் அதைக் கூறியும் விட்டாள்

''திருமணம செய்து கொண்டால்தான நாம் வாழ முடியும்? இபபொழுது நம்மிடமிருந்து இன்பம் விலகியா நிற்கிறது?'' என்று கண்ணபிரான் பதில் சொன்னன்.

பிரேமாவின் முகம் மாறிற்று; ஆவலின் அஸ்திவாரம் ஆட்டங் கொடுத்ததுபோல் தெரிந்தது; நிலைமையைச் சமாளித்துக் கொண்டாள்!

அந்தச் சமயத்தில் அவளது கன்னத்தில் ஒரு சிறு தட்டு தட்டினன் கண்ணபிரான்; கொதிக்கும் நெருப்பில் குளிர்நீர் ஊற்றியதுபோல் இருந்தது அவளுக்கு!

''எழுத்தாளரே — காதலில் ஜீவனைக் காணும் கவிஞரே— 'பிரேமா என்ற சொல்லில் பிரணவ மந்திரம் பொதிந்து கிடப்பதாக வர்ணித்த புலவரே — மலையுச்சியிலிருந்து மளாரென்று குதித்துவிட்டீரே' என்று கிண்டல் செய்யத் தொடங்கினுள் பிரேமா!

உண்மையாகவே ... கிண்டல், உள்ளக் கிளர்ச்சியாக மாறி விட்டது!

பிரேமாவுக்கும்— கண்ணபிரானுக்கும் திருமணம நடைபெறுவதற்கு முன் குழந்தை பிறந்த கட்டம் வந்தது; பிரேமா ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்; ஆனல் பிரேமாவுக்கு இன்னும் திருமணமாகவில்லை!

பிரேமாவுக்கும் — கண்ணபிரானுக்கும் திருமணம் ஆகவில்லையே தவிர, கண்ணபிரானுக்கும் — மீனட்சிக்கும் விவாக சுப முகூர்த்தம் முடிந்துவிட்டது!

தேசிய எழுத்தாளர் ஸ்ரீமான் கண்ணபிரான் அவர்களுக்கும்—மயிலை பெரிய பண்ணை மயூரநாதய்யர்மகள் மீனட்சியம்மாளுக்கும் மணமான செய்தி, போட்டோக்களுடன் பத்திரிகைகளில் வந்தது

இந்த முகூர்த்தம் முடிவதற்குள் பிரேமா; தனது காதலனுக்குக் கடிதங்கள் பல எழுதினள்!

வரதாச்சாரியார் மகனே—வரதட்சணைப் பிரச்சினையில் நாட்டம் செலுத்தினன், மீனட்சியின் புகைப்படத்தில் மனதைப் பறிகொடுத்தான். அவளைப் பற்றிய சொல்லோவியம் தீட்ட அயல்நாட்டுக் கவிதைகளில் ஏதாவது வர்ணனை கிடைக்குமா என்று தேடிக்கொண்டிருந்தான்!

ஃ ஃ ஃ

பிரேமாவின் கடிதங்கள் அவளது கதறல்கள் கேட்பாரற்றுப் போயின!

பிறந்த சிசுவைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டு விட்டாள் பிரேமா; அப்பொழுது தான் அவளது மாஜி மாமனர் வரதாச்சாரி 'விதி விளையாடுகிறது' என்று கூறினர்

தேசபக்தர் தெய்வசிகாமணி, 'சுதந்திரமில்லாத கோளாறு' என்று கூறினர்.

பொது உடைமைப் பொம்முராயர்; பொருளாதாரஸ்தம்பனம் எனப் புகன்ருர்

பிரேமாவுக்காக இரங்குபவர் எவருமிலர்; திமிர் கொண்ட சிறுசுகி அய்யர் மகனைக் கெடுத்ததுமில்லாமல் குழந்தையை வேறு தூக்கிக் கொண்டு யார் குடி கெடுக்கவோ அலைகிருள் என்று ஊர் உளறிற்று!

கண்ணபிரான் செய்த விபச்சாரம வெளிவரவில்லை — ஆண்மையால் அது மறைக்கப்பட்டுவிட்டது; அதற்கு சாதித் திரையும் விடப்பட்டது;

எதிர்த்த வீட்டுக் கமலா, சாந்தாராமை ஏமாற்றி வேறொருவனை மணந்தது 'விபச்சாரம்' என்று கூறப்படவில்லை; காரணம் கமலா வீட்டுத் தயவு பலருக்குத் தேவையாக இருந்தது தான்!

பிரேமா ஒரு திக்கற்ற ஏழை — அவள் மட்டும் விபச்சாரியாக்கப்பட்டு விட்டாள்!

விபச்சாரத்திற்கு விளக்கம் தந்திட்ட அவள் கையிலே ஒரு குழந்தை — ஆனல் கழுத்திலே தாலி இல்லை!

கமலா, சாந்தாராமின் ஆசைக்குரியவளாக அணைப்புக்கு உரியவளாக இருந்தது தெரியாத்தனம்!

பிரேமா, கண்ணபிரானை நெஞ்சாரக் காதலித்தது மட்டும விபச்சாரித்தனம்!

கண்ணபிரான் பிரேமாவை ஏமாற்றியது சாதிப் பெருமை; சமூகப் பாதுகாப்பு!

சாந்தாராம் கமலாவைக் காதலித்தது மட்டும் சண்டாளத்தனம்; இது ஊரார் தீர்மானம்; ஏன் — உலகமே அப்படித்தானே — இங்கே நல்ல தீர்ப்பு ஏது?

மளிகைக் கடையில் சாமான் வாங்கும் சாதாரண பேர்வழி, கொஞ்சம் உளுந்தை எடுத்துத் தன் கூடையிலே போட்டுக்கொண்டால் அது திருட்டு!

கடைக்காரன் முக்கால் மணங்கை முழு மணங்காக நிறுத்துக்கொடுத்தால் அது வியாபாரத் தந்திரம்!

சாதாரண மனிதன் பொய் சொன்னல் அது பஞ்சமா பாதகம்—வக்கீல் சொன்னல் திறமை

குடிசையில் வாழும் குப்பன் குடித்துவிட்டு ஆடினல் அவனுக்குக் குடிகாரப பட்டம்—அதே காரியத்தைப் பெரிய மனிதர்கள் என்று பேசப்படுவோர் செயதால், அது என்ஜாய்மெண்ட்!

சாதாரண மனிதன் தன் மனைவியைப் பிறருக்குத் தானம் செய்தால்; அது மானமற்ற காரியம்!

அதே வேலையை இயற்பகை நாயனர் செய்தால், அது பக்திப பிரவாகம் ?

கமலா, காதலனை ஏமாற்றினுள்; கண்ணபிரான் பிரேமாவை ஏமாற்றினன்; இதில் நடுநிலைத் தீர்ப்புக்கூற இந்தப் பாழும் சமுதாயம் சம்மதிக்கவில்லை

ஃ ஃ ஃ

குழந்தையை வளர்த்தாக வேண்டுமே? இந்தக் கவலை பிரேமாவைக் கப்பிக்கொண்டது,

குழந்தையின் கண்ணொளியில் பிரேமா, கண்ணபிரானைக் காண்பாள்! கண்ணீர் பெருக்குவாள்; சாதித் 'திமிர்' என்று முணுமுணுப்பாள்; மாண்டு விட்ட தாயாரின் உபதேசம நினைவிற்கு வரும்— விதி,விதி என்று பலமுறை கூறுவாள்!

எங்கேயோர் ஒரு ஊரின் கடைத் தெருவில் பிரேமா குழந்தையுடன் செல்கிருள், கடைத் தெருவில் தொங்கிய விளம்பரம் அவள் கவனத்தை இழுத்தது; அதன் விளைவாக

[9-ம் பக்கம் பார்க்க]

M.K. TRADERS MK MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்!

H.O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28

திறமையுள்ள ஆண் - பெண் கேன்வாசர்கள் தேவை'

வியாபாரம்.....

(8ம் பக்கத் தொடர்ச்சி)

'நாகரிக நாடகக் கம்பெனி' யில் சேர்ந்தாள்; அவளுக்கு இயற்கையாக அமைந்த 'சங்கீத ஞானம்' பக்கபலமாக இருந்தது!

உலகைப் பற்றியே சரியாகத் தெரிந்து கொள்ளாத பிரேமா — விதியை நம்பி வாழ்ந்த பிரேமா — அய்யர் குலத்தை அமரர் குலமாகக் கருதியிருந்த பிரேமா— வெளுத்ததெல்லாம்பாலென எண்ணிடும் பிரேமா — தற்கால நாடக உலகில் விபச்சாரக் கலையை வளர்க்கும் விஷ ஊற்றுகள் இருப்பதை எப்படி அறிவாள்?

இரண்டு மாதங்கள் நகர்ந்தன; பிரேமாவின் வாழ்க்கையில் இரண்டாவது அத்தியாயம் தொடங்கிற்று.

வேடம் போட்டுக் கொள்ளும் பகுதி — புகழ்பரவும்பகுதி— மாலைகள் விழும்பகுதி என்ற முறையில் வாழ்க்கை ஏடுகள் புரண்டன.

நாடக விளம்பரங்களில், பிரேமா பாயின் பெயர், 'ஸ்பெஷல்' வர்ணங்களால் எழுதப்பட்டன!

"பிரேமா—இன்று உன் நடிப்பு பலே ஜோர்!"

"ஆமாம்! அப்படித்தான் சொன்னார்கள்!

"நீ இன்னும் முற்போக்கடைய வேண்டுமென்பது என் ஆசை!"

இல்லை—என் குழந்தையைக் காப்பாற்றும் அளவில் என் வாழ்க்கை இருந்தால் போதும்!"

"குழந்தையை மட்டும் காப்பாற்றுவது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்வது எவ்வளவு முட்டாள் தனம் என்பது உனக்குத் தெரியவில்லையா?"

"வேறு நான் வாழ்வதற்கு இந்த உலகில் எந்த ஆதாரமும் இல்லை!"

"உனது விதவைத் துயரை தீர்த்து—விதவிதமான இன்பங்களை உன் முன் அடுக்கி வைக்ககாத்துக்கொண்டிருப்பவனை, 'முருங்கை மிலார்' என்று கருதுகிறாயா?'

அப்படிக் கூடக் கருதவில்லை; நஞ்சை நாக்கில் தடவும் நயவஞ்சகனாகக் கருதுகிறேன்'

"பிரேமா—இதோ பார்; நான் இந்தக் கம்பெனியின் சொந்தக்காரன் -"

"சார்—தெரியும். தயவு செய்து என்னைத் தொடாதீர்கள்?'

ஒரு நாள் இரவு பிரேமாவுக்கும் கம்பெனி உரிமையாளருக்கும் இந்தச் சச்சரவு!

கம்பெனியின் உரிமையாளர் வெற்றி பெறவில்லை' என்று பிரேமா நெஞ்சார ஒத்துக் கொள்ளமாட்டாள்!

நளாயினி நாடகத்தில் நல்ல பெயர் வாங்கிய அன்றுதான் இந்த நாடகமும் நடந்தது.

சொந்தக்காரரிலிருந்து இராஜபார்ட் நடிகன்--காமிக் நடிகன்-- சீன் இழுப்பவன் வரையில் காற்று வீசும் பக்கத்தில் வாலைக் குழைத்து நின்றனர்! பிரேமா விரும்பியிருந்தால், 'நாடக ராணியாகவே மாறியிருக்கலாம்; சினிமா மோகினியாகத் தோன்றியிருக்கலாம்; எத்தனையோ கண்ணபிரான்களைக் கடைக்கண்ணுக்கு இரையாக்கியிருக்கலாம்; ஆனால் அவளதுவாழ்வு ஒரே ஒரு தேவையின் மீது தான் தொங்கிக் கொண்டிருந்தது:

கோகிலா—அவள் குழந்தை; அதற்காக அந்தப் பைத்தியம் உயிர் வாழ்ந்தாள்; ஆனால் அவளைச் சுவைக்க ஓர் எறும்புப் பட்டாளம் அணிவகுக்கத் தொடங்கியது!

ஒருநாள் திடீரெனக் கம்பெனியை விட்டு பிரேமா மறைந்துவிட்டாள்!

எங்கேயோ சுற்றினாள் — என்னென்னவோ எண்ணினாள்; பசி, பசி; இந்தக் கொடுமையை அவளாவது பொறுத்துக் கொள்ளமுடியும்--அந்தச் சிசு என்ன செய்யும்?

குழந்தைக்குப் போதுமான பால் அவளிடம் இருந்தால் தானே? குழந்தை, வீர், வீர்' என அலறும்; அவளும் அதோடு சேர்ந்து கொள்வாள்!

குழந்தை தாயின் முகத்தைப் பார்க்கும்-பிரேமா மகளின் முகத்தைப் பார்ப்பாள்! இந்த இருவரின் முகங்களையும் பார்க்க யாருமில்லை'

'பிரபஞ்சம் தன்னைப் பார்த்து அலட்சியமாகச் சிரிக்கிறது என்று எண்ணிக் கொள்வாள் பிரேமா; 'விதி என்ற பேய் எதிரே நின்று கைகொட்டிச் சிரித்து, என்னை நம்பி ஏமாந்தாயா?'' என்றுஏளனம் செய்வதுபோல் தெரியும்; கண்களை மூடித் திறப்பாள், இரண்டு சிவசமுத்திர நீர் வீழ்ச்சிகள் அவள் கன்னங்களை குளிப்பாட்டிக் கொண்டிருக்கும்!

மறுபடியும் சிசுவை நோக்குவாள்; உலர்ந்த உதடுகளை அசைத்தவண்ணம் அது தாயின் மேலாடையைப் நகர்த்தும்; பின்னர், அவள் முகத்தைப் பார்க்கும்; 'பிரேமாவின் முகத்தில் வழியும் கண்ணீர் பாலாக இருக்கக் கூடாதா?'' என்று கேட்பது போல் இருக்கும் - அந்தப் பேதைக் குழந்தையின் சோகப் பார்வை!

ஃ ஃ ஃ

மூன்றும்நாள்; பிரேமாவுக்கு சேத்பவனத்துச் சீமாட்டியின் பேட்டி கிடைத்தது; வேலைக்காரி வேலைக்கு விண்ணப்பம் போட்டாள்.

ஆனால் சீமாட்டி குழந்தை தனக்கே வேண்டும் என்றாள்; பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று!

பிரேமாவின் ஆசை தீர்ந்தது! பெரிய பாரம் நீங்கிற்று!

'பிள்ளையோ பிள்ளை' வியாபாரம் வெற்றிகரமாக முடிந்தது!

ஆனால் அவள் வாழ்வு...? ●

முப்பெரும் தத்துவ மோதிரங்கள்!



மேற்படி மோதிரங்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. பல ஆண்டுகள் உழைக்கக் கூடிய ஒரு மோதிரம் விலை ரூ. 15. தபால் செலவு தனி. உங்களுக்கு தேவையான மோதிரத்தைக் குறிப்பிட்டு நுங்கள் விரல் அளவை நூலில் எடுத்து, ரூ. 3 அட்வான்சுடன் அனுப்பினால், மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் மோதிரத்தை V. P. P மூலம் அனுப்பிவைக்கிறோம்.

தயாரிப்பாளர்: சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு, (சந்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை 600 072.

"போட்டோ வீனஸ்" 104, C. N. K. ரோட், சென்னை-600 005.

குருட்டுக் குமுதமே துள்ளிக் குதிக்காதே!

"ஷா கமிஷனின் இடைக்கால முடிவைப் பார்க்கும்போது விசாரணைக் குழுக்களிடம் நமக்குள்ள நம்பிக்கை சற்று அசைந்து கொடுக்கத்தான் செய்கிறது..."

சர்வாதிகாரி இந்திராவின் குரலாக அன்றும் இன்றும் தமிழ்நாட்டில் ஒலித்து வரும் 'குமுதம்' ஏடு தனது 25.5.73 தலையங்கத்தில் இவ்வாறு சலித்துக் கொண்டிருக்கிறது.

விசாரணைக் குழுக்களிடம் குமுதத்திற்குள்ள நம்பிக்கை அசைந்து கொடுக்க ஒரே காரணம்—ஷா கமிஷன் அறிக்கை 'இந்திரா குற்றவாளியே' என்று ஆதாரங்களுடன் ஆணித்தரமாகக் கூறியது தான்

பழி வாங்கும் நோக்கோடு அமைக்கப்பட்டு — காசுக்குப் பலியானவர்களையும், வாழ்வுக்குப் பயந்தவர்களையும் சாட்சிகளாகத் தயாரித்து— குறுக்கு விசாரணை செய்யக் கூட அனுமதி தர மறுத்து— காவல்துறையினர், புலனாய்வுத் துறையினர் அனைவரையும் முடுக்கிவிட்டு — விசாரணை என்ற பெயரில் 'கேலிக் கூத்து' நடத்திய சர்க்காரியா கமிஷன் அறிக்கையைக் கண்டால் மட்டும், விசாரணைக் குழுக்களிடம் குமுதத்திற்குள்ள நம்பிக்கை வளர்கிறது

ஆனால் —

சுதந்திரமான சூழ்நிலையில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டு — காவல் துறையினர். புலனாய்வுத்துறையினர் ஆகியோர்களின் மிரட்டல்கள் ஏதுமின்றி — நியாயமான விசாரணை நடத்திய பிறகு—ஷா கமிஷன் அறிக்கை உண்மைகளை வெளியிட்டால் மட்டும் விசாரணைக் குழுக்களிடம் 'குமுதத்திற்குள்ள நம்பிக்கை அசைந்து கொடுக்கிறது...!

வடபுலத்து 'இந்திரா' தேவியின் மீது தனக்குள்ள 'விசுவாசத்தையும்' தென்புலத்துத் தமிழர் தலைவர் மீது தனக்குள்ள வெறுப்பையும் அந்தக் கீழ்ப்பாக்கத்து ஏடு எவ்வளவு பாங்காக எடுத்துரைக்கிறது பார்த்தீர்களா?

'அவசர நிலையைப் பிரகடனம் செய்ய வேண்டிய தேவை இருந்ததா? இல்லையா...? என்பது சட்டத்திற்கு அப்பாற்பட்டதென்றும் அதுகுறித்து விசாரிக்கவோ, கருத்துக் கூறவோ ஷா கமிஷனுக்கு அதிகாரம் இல்லை என்றும் கூறி குமுதம் தாண்டிக் குதிக்கிறது

குமுதத்தின் வாதப்படி அவசர நிலைப் பிரகடனம் செய்ய இந்திராவுக்கு அதிகாரம் இருந்திருக்கலாம்... ஆனால் அதற்கான தேவை இருந்ததா என்பதுதான் கேள்வி?...

அவசர நிலைப் பிரகடனம் செய்வதற்கான எந்தத்தேவையும் இருக்கவில்லை என்பதை ஷா கமிஷன் அறிக்கை தெளிவாகக் கூறுகிறது.

அயல் நாட்டுப் படையெடுப்பு, ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான உள்நாட்டு வன்முறைகள் போன்ற நெருக்கடி வெடிக்கும் கட்டத்திலேயே தான் அவசர நிலைப் பிரகடனம் தேவை என்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட நியதி!

இவ்விரண்டு அபாயங்களும் இல்லாதபோது அனாவசியமாக அவசர நிலையைப் பிரகடனம் செய்து இந்தியா முழுக்க இருட் திரையைப் போர்த்தி மக்களனைவரையும் அச்சத்தில் ஆழ்த்தியது தவறில்லையா?

அதிகாரம் இருப்பதாலேயே எதையும்—தேவைப்படாதவைகளையும்—செய்யலாமா? 'செய்யலாம்' என அடித்துக் கூறுகிறது குமுதம்!

பழனி சித்தார்த்தன்

அமைச்சரவையைக் கூட்டி 'அவசர நிலையைப் பிரகடனம் செய்யலாமா? என இந்திரா கேட்டிருந்தால், நிச்சயம் அமைச்சரவை கூறியிருக்கும்:

"அவசர நிலையை இப்போது பிரகடனம் செய்ய வேண்டிய தேவை இல்லை!' என்று—ஆகவேதான் இந்திரா பொய்யுரைத்திருக்கிறார்;

'அமைச்சரவையைக் கலந்தாலோசிக்க எனக்கு நேரமில்லை.'' என்று.

அவசர நிலைப் பிரகடனம் செய்வதற்கு மூன்று நாட்களுக்கு முன்னரே—1975 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22-ஆம் தேதியே—நம்பிக்கைக்குரிய தம் சகாக்களோடு' அவசர நிலை குறித்துக் கலந்தாலோசிக்க இந்திராவுக்கு நேரமிருந்தது; அன்றே அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களையும் கைது செய்யத் திட்டமிட நேரமிருந்தது. அவசர நிலைப் பிரகடனத்தைத் தொடர்ந்து எழும் 'விரும்பத்தகாத நிகழ்ச்சிகளை' எப்படி ஒடுக்கவேண்டுமென்று மாவட்ட ஆட்சியாளர்களுக்கு முன்னறிவிப்பாக ஆலோசனைகள் வழங்க நேரமிருந்தது; எதிர்க் கட்சித் தலைவர்களைக் கைது செய்யத் தம் வீட்டிலிருந்தே மாநில முதல்வர்களுக்குக் கட்டளைகள் விடுத்துக்கொண்டிருக்க இந்திராவுக்கு நேரமிருந்தது; கைது செய்யப்பட்டவர்கள் அனைவரையும் அடைக்க சிறைச்சாலைகளில் போதிய இடம் இருக்கிறதா எனப் பார்த்து வர ஆட்களை அனுப்ப நேரமிருந்தது. ஆனால் பாவம், இந்திராவுக்கு அமைச்சரவையைக் கலந்தாலோசிக்கத்தான் நேரமில்லாமல் போய்விட்டது!

ஜூன் திங்கள் 25-ஆம் தேதி நள்ளிரவில் அவசர சர நிலைப் பிரகடனம் வெளியிடப்படுகிறது; அன்று மாலை ஐந்து மணிக்கே குடியரசுத் தலைவரை சந்தித்து 'அவசர நிலைப் பிரகடன' அவசியத்தைப்பற்றிப் பேசுகிறார் இந்திரா—அவர் நினைத்திருந்தால் இடைப்பட்ட நேரத்தில்கூட அமைச்சரவையைக் கூட்டியிருக்க முடியுமே... .....ஆனால் கூட்டவில்லை... காரணம் ...... கூட்டியிருந்தால் அவசரநிலைப் பிரகடனம் தேவையில்லை' என்று அமைச்சரவை மறுத்திருக்கும்...

இந்த உண்மைகளையெல்லாம் 'சட்டப் பிரச்சினை...... அரசியல் பிரச்சினை........' போன்ற 'பெரிய பெரிய' வார்த்தைகளைப் போட்டு மறைக்கப் பார்க்கிறது குமுதம்! இந்த உலகிலேயே அதிபுத்திசாலி தான்தானென்றும் பிறரெல்லாம் ஏதுமறியாப் பேதைகள் என்றும் குமுதம் நினைத்துக் கொண்டிருப்பதால்தானே தன்னுடைய குயுக்தியான -குருட்டுத் தனமான-வாதங்களைத் தலையங்கங்கள் மூலமாகவும், கேள்வி பதில்கள் மூலமாகவும் 'கக்கிக்' கொண்டிருக்கிறது.

சரி—

குமுதத்தின் வாதப்படியே, அவசரநிலைப் பிரகடனம் செய்ய இந்திராவுக்கு அதிகாரமும், அதற்கான தேவையும் இருந்ததாகவே வைத்துக் கொள்வோம்.

அந்த இருண்ட காலத்தில் நடந்த கொடுமைகள் - துர்க்மன்கேட் துப்பாக்கிச்சூடு - சிறைச்சாலைச் சித்திரவதைகள் - கட்டிட இடிப்புகள் - ஏழை எளியவர்களின் குடிசைகளைப் பிய்த்தெறிந்து அவர்களை நடுவீதியில் தவிக்க விட்டது — காவல்துறையினரையும், புலனாய்வுத்துறையினரையும் தம் வீட்டு வேலைக்காரர்களாகப் பயன்படுத்தி வேண்டாதவர்களைப் பழிவாங்கியது—நீதிமன்ற விவகாரங்களில் குறுக்கிட்டு 'நீதி தேவனையே களங்கப்படுத்தியது—

சர்வாதிகாரத்தனமான ஆட்சிப் போக்கை எதிர்த்து முதல் முழக்கம் செய்த காரணத்திற்காக தமிழகத்தை ஆண்ட தி. மு. கழக ஆட்சியை நீக்கியது — தலைவர்கள் மீதும் தொண்டர்கள் மீதும் அபாண்டமாகப் பழிசுமத்தி 'சர்க்காரியா கமிஷன்' என்ற பெயரில் பழிவாங்கும் படலத்தைத்துவக்கியது—போன்ற இன்னும் எண்ணற்ற கொடுமைகள் — எல்லாம் குமுதத்தின் பார்வையில் படவில்லையா?

கொடுமைகள் நடந்தது உண்மைதான் என ஷா கமிஷன் அறிக்கை ஒப்புக் கொள்கிறதே, அது குறித்துக் கருத்தொன்றும் கூறாது குமுதம் மௌனம் சாதிப்பதன் பொருள் என்ன?

இறுதியாக—

"ஷா கமிஷனின் இந்த பலவீனமான . தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு ஜனதா அரசு கடும் நடவடிக்கை எடுக்குமானால் பொது

(12ம் பக்கம் பார்க்க)

சட்டம் என்ன தூங்குகிறதா ?

"எட்டு வயதுள்ள பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பவன் சொர்க்கலோகத்தையும், ஒன்பது வயதுள்ள பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பவன் வைகுண்டத்தையும், பத்து வயதுள்ள பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பவன் பிரம்மலோகத்தையும் அடைகிருன்; அதற்கு மேம்பட்டு பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பவன் நரகத்தை அடைகிருன்......"

ஞானி என்று அழைக்கப்பட்ட பராசர் என்ற மதக் கிறுக்கு பிடித்த மடமைவாதி தீட்டிய சாஸ்திரம்'தான் மேற்சொன்னது

அந்த சாஸ்திரத்தை'த் தலைமேல் ஏற்றுக் கடந்த பத்தாம் தேதி அன்று—அதாவது 'அக்ஹா டீஜ்' என்ற 'புனித நாளில்'—பம்பாய் அருகே இருக்கும் மார்வார் என்ற பகுதியில் பத்தாயிரம் குழந்தைகளுக்கு ஒரே நேரத்தில் குழந்தை மணம் (பால்ய விவாகம்) நடத்தியுள்ளார்கள், காட்டுமிராண்டித்தனமான குணம் இன்னும் அகலாத சில மதக் கிறுக்கர்கள்

திருமண வைபோகம்' நடந்தபோது பெரும்பான்மையான குழந்தைகள் விரல் சூப்பியவாறு பெற்றேர்களின் மடியில் உறங்கிக் கிடந்தனவாம்.

சத்தியமூர்த்தி (அய்யர்), எம். கே. ஆச்சாரியார், பாலகங்காதர திலகர் போன்ற பல 'தேசியத் தலைவர்கள்' கடுமையாக எதிர்த்தும் 'குழந்தை மணம்' என்ற கொடிய வழக்கத்திற்கு இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ்' அரசு தடைவிதித்தது.

விடுதலை பெற்ற இன்றைய இந்தியாவிலும் 'குழந்தை மணம்' சட்டப்படிக் கடுமையான குற்றமே!

—ஆனால், பத்தாயிரம் குழந்தைகளுக்கு 'பால்ய விவாகம்' செய்துவைத்த பாவிகளை' ஒன்றும் செய்யாமல் சட்டம் என்ன தூங்கிக்கொண்டா இருக்கிறதா?

( )-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டேரிபட்டு போஸ்ட்,
திண்டிவனம் வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் :

எம். பி. கிருஷ்ணமூர்த்தி,
சின்ன நற்குணம் போஸ்ட்,
திண்டிவனம் வட்டம் (தாலுகா)
தெ.ஆ. மாவட்டம்.

சுப்பிரமணி,
சித்தனை போஸ்ட்,
திண்டிவனம்வட்டம், (தாலுகா)
தெ ஆ. மாவட்டம்.

எஸ் ராமதாஸ்,
தெடி கிராமம்,
நெடிமொழியனூர் போஸ்ட்
திண்டிவனம் வட்டம் (தாலுகா)
தெ.ஆ. மாவட்டம்;

குமராட்சி ஒன்றியம்

செயலாளர் :

எஸ். எஸ். முத்து,
மெயின் ரோடு
குமராட்சி (அஞ்சல்)
சிதம்பரம் வட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் :

கி. கிருட்டிணமூர்த்தி,
வடக்கு மாங்குடி,
வடக்கு மாங்குடி அஞ்சல்,
வல்லம்படுகை வழி,
சிதம்பரம் வட்டம்.

மா. இராமச்சந்திரன்,
இளநாங்கூர்,
வையூர் அஞ்சல்,
சிதம்பரம் வட்டம்.

ஜே. எச். மொய்தீன்,
கடைத் தெரு.
குமராட்சி அஞ்சல்,
சிதம்பரம் வட்டம்.

மரக்காணம் ஒன்றியம்

செயலாளர் :

ந. இமயவரம்பன்.
சன்னதி தெரு மரக்காணம்.

மாவட்டப் பிரதிநிதிகள் :

வெ. இராமநாதன்,
கட்டளை கிராமம்,
எண்டியூர் அஞ்சல்,
திண்டிவனம்.

சி. இராமமூர்த்தி,
முருக்கேரி.
சிறுவாடி அஞ்சல்
பிரம்மதேசம், திண்டிவனம்.

தா. அ. பாட்சா,
தாழங்காடு,
தாழங்காடு அஞ்சல்,
திண்டிவனம்.

திருநாவலூர் ஒன்றியம்

செயலாளர் :

வி. சுப்பிரமணியன்
அண்ணா குடில்
திருநாவலூர் அஞ்சல்;
உளுந்தூர்பேட்டை வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் :

சே கலியன்,
களமருதூர்,
களமருதூர் அஞ்சல்,
உளுந்தூர்பேட்டைவட்டம்,
தெ.ஆ மாவட்டம்.

ரா. சுப்பிரமணியன்,
கருவேப்பிலைபாளையம்,
சிறத்தனூர் மதுரா,
மடப்பட்டு போஸ்ட்,
உளுந்தூர்பேட்டை வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்.

எஸ் செயராமன்,
திருநாவலூர்,
திருநாவலூர் அஞ்சல்,
உளுந்தூர்பேட்டை வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்.

செஞ்சி நகரம்

செயலாளர் :

வி. ரங்கநாதன்,
பீரங்கிமேடு,
17, அப்பாகவுண்டர் தெரு,
செஞ்சி அஞ்சல்
செஞ்சி தாலுக்கா,
தெ.ஆ. மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் :

எம். சின்னதம்பி,
பொன்பத்தி கிராமம்,
மேல்எடையாளம் அஞ்சல்,
செஞ்சி தாலுக்கா,
தெ. ஆ. மாவட்டம்.

கோ. நாராயணசாமி,
அத்தியூர் கிராமம் அஞ்சல்,
(வழி) அனந்தபுரம்,
செஞ்சி தாலுக்கா,
தெ.ஆ. மாவட்டம்.

எம். எஸ். நிசாமொய்தீன்,
3, மசூதி தெரு,
சிறுகடம்பூர்,
செஞ்சி அஞ்சல்,
செஞ்சி தாலுக்கா,
தெ. ஆ. மாவட்டம.

கோலியனூர் ஒன்றியம்

செயலாளர்

வ. சாமிக்கண்ணு,
29, பஞ்சாயத்து அலுவலக வீதி,
வளவனூர்.
கோலியனூர் ஒன்றியம்,
விழுப்புரம் வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் :

ஆ. நந்தகோபால்
ம. குச்சிபாளையம்,
கோலியனூர் போஸ்ட்,
விழுப்புரம வட்டம்,
தெ ஆ. மாவட்டம்.

என். சித்தாராமன்.
சேந்தனூர் அஞ்சல்,
விழுப்புரம் வட்டம்.

வ. வேணுகோபால்,
பணங்குப்பம்,
வளவனூர் அஞ்சல்,
விழுப்புரம் வட்டம்,
தெ ஆ. மாவட்டம்

பரங்கிப்பேட்டை ஒன்றியம்

செயலாளர் :

துரை. கலியமூர்த்தி. எம்.எல்.ஏ.
4 ஆதிவராகநல்லூர் அஞ்சல்
சிதம்பரம் தாலுக்கா,
தெ.ஆ. மாவட்டம்,

மாவட்டப் பிரதிநிதிகள் :

ஜே இராமையன்,
கீழச்சாவடி,
தில்லைவிளாகம் அஞ்சல்,
சிதம்பரம் தாலுக்கா,
தெ.ஆ மாவட்டம்.

பட்டாபிராமன்,
கீழச்சாவடி,
தில்லைவிளங்கன் அஞ்சல்,
சிதம்பரம் தாலுக்கா,
தெ.ஆ மாவட்டம்.

ந. வைத்தியநாதசாமி,
கிள்ளைத் திருநகர்,
கிள்ளை அஞ்சல்,
சிதம்பரம் தாலுக்கா,
தெ.ஆ. மாவட்டம்.

சங்கராபுரம் ஒன்றியம்

செயலாளர் ;

மொ. சுப்பராயன்,
புத்திராம்பட்டு அஞ்சல்,
கள்ளக்குறிச்சி வட்டம்,
தெ.ஆ மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் :

என். இராமு,
அரசம்பட்டு அஞ்சல்,
கள்ளக்குறிச்சி வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்.

சு ஜெயசேகரன்,
1-3, வடக்கு தெரு,
சங்கராபுரம் அஞ்சல்,
கள்ளக்குறிச்சி வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்.

சு. வெங்கடபதி. பி ஏ., பி எல்.
19-சி, காசிம் சாயபு கொல்லை தெரு,
கள்ளக்குறிச்சி,
தெ.ஆ. மாவட்டம்.

உளுந்தூர்பேட்டை நகரம்

செயலாளர் :

உஸ். சீத்தாராமன்
குஞ்சரம்—குஞ்சரம் அஞ்சல்,
உளுந்தூர்பேட்டை வட்டம்,
தெ.ஆ. மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் :

கோ. இராசவேல்.
பாலிப் போஸ்ட்.
(வழி) மங்களம்பேட்டை,
உளுந்தூர்பேட்டை.
தெ ஆ மாவட்டை.

எம். கனி
பிஸ்மில்லா ரைஸ் மில்,
மெயின் ரோடு,
உளுந்தூர்பேட்டை,
தெ ஆ. மாவட்டம்

ஏ. மாரி, 6-பி, பிள்ளையார்
கோயில் படையாட்சி தெரு,
உளுந்தூர்பேட்டை,
தெ.ஆ மாவட்டம்

ரிசிவந்தியம் ஒன்றியம்

செயலாளர் :

நா. கோதண்டபாணி. பி.ஏ.
மேற்கு வீதி, ரிசிவந்தியம்,
பின்கோட்—606 205.

மாவட்டப் பிரதிநிதிகள் :

சி. அங்கமுத்து,
டெய்லர், கடை வீதி,
இரசிவந்தியம்—606 205.

கே. ஆர். இராசகோபால்,
கடம்பூர் அஞ்சல், (வழி)
விழுப்புரம், ஆர்.எம்.எஸ்.
பின்கோட்—605 802.

கி. நாகராசன்,
சைக்கிள் ஸ்டோர்,
இரசிவந்தியம்—606 205.

மங்கலூர் ஒன்றியம்

செயலாளர் :

மு. இராசு,
17, மெயின் ரோடு,
திட்டக்குடி அஞ்சல்,
விருத்தாசலம் தாலுக்கா,
தெ.ஆ. மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் :

எஸ். கிருட்டிணசாமி,
பனையாந்தூர்,
வி. மாமந்தூர் அஞ்சல்,
நையனூர்பாளையம் (வழி)
பின் கோட்—606 301

ம, தங்கராசு,
ஆவட்டி அஞ்சல்,
தொழுதூர் (வழி),
விருத்தாசலம் தாலுக்கா.

து. பொன்னுசாமி,
மலையனூர் அஞ்சல்,
மங்கலூர் (வழி),
விருத்தாசலம்—606 108.

தியாகதுருகம் ஒன்றியம்

செயலாளர் :

அ. நடராசன்,
நகாலூர்.

மாவட்டப் பிரதிநிதிகள் :

பொன். இராமகிருட்டிணன்,
சேலம் மெயின் சாலை,
தெ ஆ மாவட்டம்.

மா. நாராயணன்,
சேலம் மெயின் சாலை,
தெ ஆ மாவட்டம்.
பின்கோட்—606 206.

இரா. மணிமாறன்,
தியாகை,
தியாகதுருகம் (வழி)
தெ ஆ மாவட்டம்,
பின்கோட்—606 206.

கல்விராயன்மலை ஒன்றியம்

செயலாளர் :

மு முத்தையன்.
அரசம்பட்டு. சங்கராபுரம்,
தெ.ஆ. மாவட்டம்—606 401

மாவட்டப் பிரதிநிதிகள் :

சேக் மூசா,
பழைய பாலபட்டு.
புது பாலப்பட்டு அஞ்சல்,
சங்கராபுரம்,
தெ ஆ மாவட்டம்.

து. நடேசன்,
புது பாலப்பட்டு.
சங்கராபுரம்—606 401.

கு பொன்னுசாமி
பாச்சேரி
புது பாலப்பட்டு அஞ்சல்,
சங்கராபுரம்—606 401.

காட்டுமன்னார் கோயில் ஒன்றியம்

செயலாளர் :

எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி,
முட்டம் அஞ்சல்
நெல்பேட்டை (வழி)
சிதம்பரம் வட்டம்,
பின் கோட்—608 303

மாவட்டப் பிரதிநிதிகள் :

ஆர் அரங்கநாதன்
நெடுஞ்சேரி அஞ்சல்,
ஸ்ரீ முஷ்ணம் (வழி)
சிதம்பரம் வட்டம்.

ச. அய்யாதுரை.
சாவடித் தெரு,
இராசேந்திர சோழகன் (அ-ல்)
காட்டுமன்னார் கோயில் வழி,
பின்கோட்—608 301.

ஜி. கே. மூர்த்தி,
தொரப்பு, சண்டன் (அ-ல்.)
ரெட்டியூர் (வழி)
சிதம்பரம வட்டம்—608 304.

திண்டிவனம் நகரம்

செயலாளர் :

வ. துரை,
20, தியாகி சண்முகப் பிள்ளை
தெரு, திண்டிவனம்போஸ்ட்,
தெ.ஆ. மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் :

எஸ் ஏ. லத்தீப
907, நேரு வீதி.
திண்டிவனம் போஸ்ட்,
தெ ஆ மாவட்டம.

டி. புருஷோத்தமன்.
வைதிலிங்கம் முதலியார்
தோளங்காடி,
திண்டிவனம் போஸ்ட்,
ஜவகர்லால் நேரு வீதி,
தெ ஆ மாவட்டம்.

விழுப்புரம் நகரம்

செயலாளர் :

பா. கோபால்,
14, ஜால்ரா முதலி தெரு,
விழுப்புரம்.

மாவட்டப் பிரதிநிதிகள் :

அப்துல் ரசாக்,
320, நேருஜி நெடுஞ்சாலை,
விழுப்புரம்

ப. செல்வராஜ
27, கலைஞர் கருணாநிதி தெரு,
விழுப்புரம்.

நெல்லிக்குப்பம் ஒன்றியம்

செயலாளர் :

மு. கலியபெருமாள்,
40, மோரைமேட்டுத் தெரு,
நெல்லிக்குப்பம்.
தெ ஆ. மாவட்டம்,
பின்கோட்—607 105.

மாவட்டப் பிரதிநிதி :

அருள் முருகேசன்,
மெயின் ரோடு
நெல்லிக்குப்பம்—507 105.

(11-ம் பக்கம் பார்க்க)

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

சிதம்பரம் நகரம்

செயலாளர் ;

நெ. சு. விசயராகவன்,
15, வடக்கு வீதி, சிதம்பரம்.

மாவட்டப் பிரதிநிதிகள் :

சே கலியபெருமாள்
53ஏ சபாநாயகர் தெரு,
சிதம்பரம்.

கி மகாலிங்கம்,
பாரதி தெரு
(பாலைய்யர் தெரு)
சிதம்பரம்

நெய்வேலி நகரம்

செயலாளர் :

மு. சு மணி.
சி-28, தங்கசாலை,
வட்டம்-10, நெய்வேலி—1.

மாவட்டப் பிரதிநிதிகள் :

ஆர். சம்பத்
சி 18 கோதாவரி சாலை,
வட்டம்-12, நெய்வேலி – 12.

ப மு தனவந்தன்,
ஆர்-டைப்
171 மந்தாரக்குப்பம் காலனி,
நெய்வேலி – 2.

எம. நாகலிங்கம்,
ஏ-12 சிகட்பு சதுரம்,
வட்டம்-25, நெய்வேலி – 3.

ஆ கோ நவநீதன்,
சி-20 கேபிள் தெரு
வட்டம்-26, நெய்வேலி – 3.

கடலூர் நகரம்

செயலாளர் :

வ. பூராசாமி, பி.இ.,
குஞ்சிக்குப்பம்,
சென்னபபநாய்க்கன்
[பாளையம் எஸ் ஓ.
கடலூர் வட்டம்,
தெ ஆ மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் :

எஸ் கே. இராமசாமி,
குண மங்கலம் அஞ்சல்,
(வழி) வரகால்பட்டு,
கடலூர் வட்டம்,
தெ ஆ மாவட்டம்.

பி ஆர் பாண்டியன்,
லட்சுமணன் இல்லம்,
நைக்கால் தோணித்துறை,
கடலூர்—3.

கு. பெருமாள்,
கரையறை விட்டகுப்பம்,
வண்டிப்பாளையம் அஞ்சல்,
கடலூர் – 4

குறிஞ்சிப்பாடி ஒன்றியம்

செயலாளர் :

எ ட நட்சிணாமூர்த்தி,
கள்ளையன்குப்பம்,
குண்டியமல்லூர் அஞ்சல்,
(வழி) புவனகிரி,
கடலூர் வட்டம்,
தெ ஆ மாவட்டம்.

ஏ டி சின்னராசு,
(த.பெ. தம்புசாமி..)
குள்ளஞ்சாவடி அஞ்சல்,
கடலூர் வட்டம்,
தெ ஆ மாவட்டம்.

வெ. குப்புசாமி,
(த.பெ வெள்ளையன்)
கோ. சத்திரம்,
மதனகோபால்புரம் அஞ்சல்,
(வழி) குள்ளஞ்சாவடி,
பண்ருட்டி வட்டம்,
தெ ஆ. மாவட்டம்.

ரெ. இருநீலம்,
எஸ் ஐ எல். புதுநகர் காலனி
வடலூர் அஞ்சல், வடலூர்,
கடலூர் வட்டம்,
தெ. ஆ. மாவட்டம் – 607 303

விருத்தாசலம் நகரம்

செயலாளர் :

டி நாராயணன்,
41, வைசியாள் தெரு,
மங்கலம்பேட்டை அஞ்சல்
விருத்தாசலம் வட்டம்,
தெ ஆ. மாவட்டம்—606 164

மாவட்டப் பிரதிநிதிகள் :

டி. பாலகிருஷ்ணன்,
பருர்பட்டி,
சின்னப்பரூர் அஞ்சல்,
மங்கலம்பேட்டை (வழி)
விருத்தாசலம் வட்டம்.

ஏ. இராமசாமி,
விசலூர்,
பாலி – அஞ்சல்,
மங்கலம்பேட்டை (வழி)
விருத்தாசலம் வட்டம்.

க. இராமநாசு
ஆலிச்சிக்குடி,
சாத்துக்குடல் அஞ்சல்,
விருத்தாசலம் வட்டம்,
கருவேப்பிலங்குறிச்சி (வழி)

பண்ருட்டி ஒன்றியம்

செயலாளர் :

ரெ ஆறுமுகம்,
வல்லம அஞ்சல்,
(வழி) பேர் பெரியாங்குளம்,
தெ ஆ.மாவட்டம்.

மாவட்டப் பிரதிநிதிகள் :

த. கிருட்டிணன்,
மருங்கூர் அஞ்சல்,
காடாம்புலியூர் (வழி)
தெ. ஆ. மாவட்டம்.

து. கோவிந்தராசலு,
அங்குசெட்டி பாளையம்,
(வழி) பண்ருட்டி,
தெ. ஆ மாவட்டம்

வடிவேலு,
முடப்பரி அஞ்சல்,
(வழி) பேர் பெரியாங்குப்பம்
பண்ருட்டி.

கடலூர் நகரம்

செயலாளர் :

எஸ் ஓ. பத்மநாபன்,
29, சஞ்சீவிராயன் கோயில்
தெரு
கடலூர் – 607 005.

மாவட்டப் பிரதிநிதிகள் :

சே. முத்து,
1, அண்ணா மார்க்கெட்,
மஞ்சகுப்பம்,
கடலூர் – 1.

என். மணியன்,
57, பிராமணத் தெரு,
கடலூர் துறைமுகம்,
கடலூர்—3.

ஆர். பெருமாள்,
3, சின்னவாணியர் தெரு,
திருப்பாபுலியூர், கடலூர்—2

கள்ளக்குறிச்சி பேரூராட்சி நகரம்

மாவட்டப் பிரதிநிதிகள் :

இ. முத்து,
செயலாளர், பேரூர் தி மு.க.
39, சேலம் நெடுஞ்சாலை,
கள்ளக்குறிச்சி—608 202.

காட்டுமன்னார் கோவில் பேரூராட்சி நகரம்

மாவட்டப் பிரதிநிதி

எச். உசேன்,
செயலாளர், பேரூர் தி மு க.
49, மேட்டுத்தைக்கால்
உண்டையார்குடி,
காட்டுமன்னார்கோவில்-608301.

திருக்கோவிலூர் பேரூராட்சி நகரம்

மாவட்டப் பிரதிநிதி

க. கோபிகிருட்டிணன்,
செயலாளர், பேரூர் தி.மு.க.
6-ஏ, அருணாசலம் பிள்ளைத்
தெரு,
திருக்கோவிலூர்-605757.

ஷா கமிஷன் அறிக்கை வெளியிடும்

'திடுக்கிடும்' உண்மைகள்!

★ அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பின் விளைவுகளிலிருந்து திருமதி இந்திராகாந்தி தப்ப வழி செய்வதற்காகத்தான் உள்நாட்டு அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டது.

★ ஒரு சிலரின் ஆசைகளை நிறைவேற்றப் பலரது நலன்கள் பலியிடப்பட்டன.

★ கட்டிட இடிப்பு நடவடிக்கைகள் அனைத்திற்கும் காரண கர்த்தா சஞ்சய்காந்தி.

★ சஞ்சய்காந்தி பொறுப்பற்ற, அரசியல் சட்டத்திற்கு விரோதமான, அரசியல் ஆதிக்க சக்தியாக உருவானது மிகப் பெரிய அத்துமீறல்.

★ இந்திராகாந்திக்கு வேண்டாதவர்கள் பற்றிய, புலனாய்வுத் துறை அறிக்கைகள் புனைந்து எழுதப்பட்டன. அது, சம்பந்தப்பட்டவர்களின் எதிர்காலத்தை மிகவும் பாதித்தது. புலனாய்வுத்துறை அரசியல்வாதிகளின் கைப்பாவையாக ஆட்டுவிக்கப்பட்டது. அதனுடைய பணிகள் எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்தும், ஆளுங்கட்சிக்குள்ளேயே ஆளும் பிரிவினருக்கு எதிராக உள்ளவர்களையும் ஒடுக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டன.

★ மத்திய புலனாய்வுத்துறை செயல்பட்ட விதத்தில் பல விரும்பத்தகாத அம்சங்கள் உள்ளன. மத்திய புலனாய்வுத்துறை இயக்குநர் டி. சென், மத்திய புலனாய்வுத்துறை எந்தப் பணிக்காக நியமிக்கப்பட்டதோ அதற்கு முரணான காரியங்களுக்கு தன்னையும், தன்னுடைய அமைப்பையும் பயன்படுத்திக்கொள்ள அனுமதித்திருக்கிறார். மத்திய புலனாய்வுத்துறை சில நடவடிக்கைகளை எடுத்திருந்தது. அந்த நடவடிக்கைகளால் மூத்த அதிகாரிகள் உட்பட சமுதாயத்தின் மதிப்புள்ள பல தனி மனிதர்களின் பெயரும், புகழும் ஈடுசெய்ய முடியாத அளவிற்கு சேதாரப் படுத்தப்பட்டிருக்கிறது.

★ தகவல், ஒலிபரப்புத்துறைக்கு இருந்த அதிகாரங்கள் மக்களை அறியாமையில் ஆழ்த்துவதற்காக தவறாகப் பயன்படுத்தப்பட்டன. எதிர்ப்பு எந்த உருவிலும் வராது தடுக்கும் முறையில் பத்திரிகை உரிமையாளர்களுக்கு அச்ச உணர்வை தோற்றுவிக்கும் வகையில் இந்த அதிகாரங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டன.

★ நீதிமன்றத் தீர்ப்புக்களை எவ்வாறு வெளியிட வேண்டும் என்று பத்திரிகைகளுக்கு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. தணிக்கை உத்தரவுகள் மனம்போன போக்கில் வெளியிடப்பட்டன,

★ அரசாங்கத்திற்குச் சொந்தமான வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் ஆளுங் கட்சியின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன.

★ அரசாங்கத்திற்கு விரோதமாகத் தீர்ப்பு அளிக்கும் நீதிபதி பதவி இறக்கம் செய்யப்பட்டனர். அல்லது பணி முடிவதற்கு முன்பே அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர்.

கலைஞர் கடிதம் ....

(முதற் பக்கத் தொடர்ச்சி)

என்னவென்று கூட கேட்கவில்லை!

இப்போது நம்மனோர் 135 பேர்மீது பயங்கரச் சட்டப் பிரிவுகள் பாயவிடப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளது!

இந்திராகாந்தி நெருக்கடி நிலையின் காரணமாக தி.மு.க.வுக்குத் தொல்லைகள் பல தந்தார் என்பது மட்டுமல்ல; ஜனநாயக விரோதமாகவும் -- சர்வாதிகாரமாகவும்-செயல்பட்டார் என்பதைக் கண்டிக்கக் கழகம், கறுப்புக் கொடி நிகழ்ச்சியை நடத்தியது! மாதங்கள் ஐந்து பறந்துவிட்டன! இப்போது திடீரென இந்த வழக்குத் தொடர இவ்வளவு ஆர்வம் ஏன் தெரியுமா?

"அரசியல் உறவுகளில் எந்த மாற்றமும் எப்போதும் ஏற்படலாம்' என்று நான் மதுரையில் பேசியதை வைத்துப் பலரும் பலவிதமான யூகங்களைச் செய்து கொண்டனர்! இந்திரா காங்கிரசுக்கும் தி.மு.க.வுக்கும் உறவு ஏற்பட்டுவிடுமோ என்று நண்பர் எம்.ஜி.ஆருக்கு ஒரு சந்தேகம்!

இப்படி ஒரு வழக்கினைப் பயங்கரமாக ஜோடிப்பதின் வாயிலாக-தி.மு.க. இந்திரா காங்கிரஸ் இரண்டையும் மோதவிடலாம் என்று ஒரு திட்டம்! அதற்காகவே இந்திரா காந்தியும் சாட்சி சொல்லப் போகிறார் என்று ஒரு அறிவிப்பு!

பாவம், மதுரை மாநகராட்சித் தேர்தலுக்காக இந்த "ஸ்டண்ட்" வேலையைச் செய்கிறார், புரட்சிநடிகர்!

தி.மு.க., எந்தக் கட்சியையும்—எந்தத் தனிப்பட்ட நபரையும் தாக்கவேண்டுமென்றோ – பழி வாங்க வேண்டுமென்றோ கொள்கை கொண்ட இயக்கமல்ல!

நாட்டுக்கு விரோதமான கொள்கைகளை, மக்களுக்குக் கேடு பயக்கும் செயல்களை, தி.மு.கழகம் வன்மையாக எதிர்க்கும்' அந்தக் கடுமையான எதிர்ப்பும் காந்திய வழியில்—அண்ணா வழியில்தான் இருக்கும்! இந்திரா காலத்து நெருக்கடிச் சட்டத்தை எதிர்த்துக் கழகம் போட்ட தீர்மானத்திலேகூட இந்தப் பிரச்னைக்கு முடிவு காண அண்ணா, காந்தி வழியில் அமைதியான முறையில் அணுகுவோம் என்றுதான் வாசகம் நிறைவு பெற்றிருக்கிறது.

எம்.ஜி.ஆர்., இந்த வழக்கைப் போட்டுவிட்ட காரணத்தாலேயே தி.மு.க. பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் எல்லோரும் ஏமாந்து போய் எம். ஜி. ஆர். ஆட்சியின் அலங்கோலங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்வதை விட்டுவிட்டு, இந்திரா காங்கிரஸ்மீது பாய்வார்கள் என்று கருதுவாரேயானால் அது எம்.ஜி.ஆர். போடும் தப்புக்கணக்காக ஆகிவிடும்!

தி.மு.க. இன்று தமிழகத்தின் தலையாய எதிர்க்கட்சி! இந்திரா இன்று டெல்லியில் அதிகாரத்தில் இல்லை! ஆளுங்கட்சிகளின் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதே ஒரு எதிர்க்கட்சியின் முக்கிய கடமை பொறுப்பு! அதே நேரத்தில் இந்திராகாந்தியின் நெருக்கடி காலத்துக் கொடுமைகளை முதன் முதலாக எதிர்த்த பெருமை தி. மு. க.வுக்கு உண்டு! அதிகாரத்தில் இல்லாதவர்களுடன் கொள்கை வேறுபாடுகள் இருக்கலாம்; அவர்கள் இருந்தபோது நடந்த கேடுபாடுகளுக்காக அடையாள பூர்வமான எதிர்ப்பைக் கறுப்புக் கொடி நிகழ்ச்சி மூலம் உணர்த்தினோம் — அது தொடர்ந்து காட்டப்பட வேண்டிய எதிர்ப்பு நிகழ்ச்சி அல்ல என்பதால்தான் இந்திரா காந்தி திருச்சி மாநாட்டுக்கு வந்தபோது கழகம், கறுப்புக் கொடி காட்டாது என்று அறிவிக்கப்பட்டதாகும்!

ஐந்தாறு மாதங்களுக்கு முன்பு நடந்த ஒரு அமைதிவழி ஆர்ப்பாட்டத்தைப் போலீசாரைக் கொண்டு வன்முறைக்குத் திருப்பி, மூன்று உயிர்களையும் (தீனன், பாபு, சுப்பிரமணி) வாயில் போட்டுக் கொண்ட எம்.ஜி.ஆர். ஆட்சி, இன்று அதனை மீண்டும் வழக்கு வாயிலாகப் பெரிது படுத்துவதால் அவர் நினைக்கிறபடி யாரையும் மோதவிட்டு வேடிக்கை பார்க்க முடியாது

தேர்தல் கால உறவுகளைத் தேடி எம்.ஜி.ஆர் அலையலாம்! அதற்காக ஆயிரம் தந்திரங்களைக் கையாளலாம்! தேர்தல் களங்களில் மோதிக்கொண்டாலும்கூட, அரசியல் கட்சிகளுக்கிடையே விமர்சனங்கள் நாகரிமான முறையில் அமைய வேண்டுமென்று விரும்புகிறது கழகம்!

அதனை மீறுவோர் கழகத்தினராயினும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறுவதில்லை!

ஆனால் அவரோ, தனது கட்சியினரை நரகல் நடையில் தாக்குவதற்கே பயிற்சி அளித்து வருகிறார்!

அதுவும் பயன்படாமல், கழகம் வளர்ந்து வருகிற காரணத்தால்-இப்போது வழக்குகளை நம்புகிறார்! பாவம்; வழுக்கிவிழப் போகிறார்!

அன்புள்ள

மு.க.

★★★★★-★★★★★★

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25-00
ஆறுமாத சந்தா ரூ. 12-50
மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

நிர்வாகி,
நம் நாடு.
அன்பகம், சென்னை-600013

விற்பனையாளர்கள் நியமனம்!

கீழ்க்கண்ட ஊர்களுக்கு 'நம் நாடு' விற்பனையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்கள் விவரம் தரப்பட்டுள்ளது. கழகத் தோழர்கள், அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை — வில்லிவாக்கம்:
எஸ். சந்திரா.
முதல் மெயின் ரோடு,
அம்பத்தூர் எஸ்டேட்,
சென்னை-58.

கும்பகோணம்:
வாசுதேவன்,
நியூஸ் ஏஜண்ட் கும்பகோணம்.

பழனி:
ஆர் பாலகிருட்டிணன்,
31, அப்பர் அகம்
சண்முகபுரம் பழனி

★★★★★★★-★★★★

(9ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களிடம் அதற்கு உள்ள செல்வாக்கு மேலும் பலவீனமடையும் என்பதில் சந்தேகமில்லை...,

என எச்சரிக்கும் குமுதம் தலையங்க எழுத்தாளரைக் கேட்கிறோம்—

சர்க்காரியா கமிஷனின் ஒருதலைபட்சமான, ஓர வஞ்சனையான அறிக்கையைக் காட்டி கலைஞர் மீதும் கழகத்தவர் மீதும் நடவடிக்கை எடுத்தால் பொது மக்கள் எதிர் நடவடிக்கையாக என்ன செய்வார்கள் என்று உமக்குத் தெரியுமா?

உமக்குத் தெரிந்திருந்தால் அதை உமது 'குட்டி' தேவனை எம். ஜி. ஆரிடமும் போய்ச் சொல்லும்.

—நீங்கள் இருவருமே அறியாதிருந்தால் காலம் அதை உங்களுக்கு உணர்த்தும்.

[illegible] தலத்திற்கு தலைவர் கலைஞர் அவர்கள் சென்றபோது தாதர் புகைவண்டி நிலையத்தில் கழகத் தோழர்கள் வரவேற்ற காட்சி.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால் அழகிரி அச்சகத்தில் (24. சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம், சென்னை-600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்: 'அன்பகம்' 1/104-B அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009.